இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered as a Catholic Weekly (G.P.O.197) Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360, Main Street, Jaffna, Sri Lanka: Tel: 021-222 2378 Fax : 021 222 9041 -E-mail: editorkavalan@gmail.com ISSN 1391-7633

மலர்: 142 இதழ் : 11 திகதி: 24.06.2018 விலை : 20.00

## இறையழைத்தல்களுக்கு செவிசாய்த்து ஊக்குவிக்கவேண்டிய காலமிது

### - மன்னார் மறைமாவட்ட ஆயர்



இறை அழைத்தல்களுக்கு செவிசாய்த்து, ஊக்குவிக்க நமது குடும்பங்களிலிருந்து இறை பணிக்கென எமது பிள்ளைகளை அர்ப்பணித்து திரு அவையைக்கட்டியெழுப்பவேண்டிய பொறுப்பு நம் எல்லோருக்கும் உண்டு என மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலய திருவிழாத் திருப்பலியில் மறையுரை ஆற்றுகையில் தெரிவித்தார்.

மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா 17.06.2018 அன்று வெகு சிறப்பாக நடைபெற்றது. யாழ் ஆயர் பேரருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி இம் மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை இணைந்து திருவிழாத் திருப்பலியை ஒப்புக் கொடுத்தனர்.

திருப்பலியில் மறையுரை ஆற்றிய மன்னார் மறைமாவட்ட ஆயர் குடும்பங்கள் இறை விசுவாசத்தில் ஆழமாக தடம்பதித்து வாழ்ந்தாலே இறையழைத்தல்களுக்கு செவிமடுக்க முடியும் எனவும் புனித அந்தோனியார் கூட ஒரு குடும்பத்திலிருந்துதான் புனிதராக வந்தார் என்பதனையும் எடுத்துக்கூறியதுடன் இன்றைய குடும்பங்கள் திருக்குடும்பங்களாக திகழவேண்டும்எனவும்கேட்டுக்கொண்டார்.

யாழ் மறைமாவட்டத்திற்கு முதற்தடவையாக வருகை தந்த மன்னார் ஆயர் அவர்களுக்கு மகத்தான வரவேற்பும் அன்றைய தினம் அளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சி மறைக்கோட்ட இளையோர் ஒன்றுகூடல்



கிளிநொச்சி மறைக்கோட்ட இளையோருக்கான ஒன்றுகூடல் கிளிநொச்சி மறைப்பணி நிலையத்தில் மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி யேசுதாஸ் அடிகளார் தலைமையில் 10.06.2018 அன்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மறைக்கோட்டத்தின் பங்குகளிலிருந்து 60 இற்கும் அதிகமான இளையோர் கலந்து கொண்டனர்.

அருட்பணி யேசுதாஸ் அடிகளார் அவர்கள் தற்கால இளையோர் தம் வாழ்வை சரியான முறையில் வாழ்ந்து எமது சமுதாயத்தில் நல்லதொரு தலைமைத்துவத்தை உருவாக்க முனையவேண்டும் என அழைப்பு விடுத்தார்.

மறைமாவட்ட இளையோர் ஒன்றிய இயக்குநர் அருட்பணி அன்ரன் ஸ்ரீபன் அடிகளார் இந்நிகழ்வை நெறிப்படுத்தியதுடன் அவர் தமதுரையில் தற்கால இளையோர் எதிர்கொள்ளும் சவால்களைச் சுட்டிக்காட்டி, இச்சவால்களுக்குள் சிக்குண்டு இளையோர் தம் இளமையைத் தொலைத்துவிடாமல் அவற்றை மேற்கொண்டு தமது இளமையை நல்ல விதத்தில் வாழ்ந்து சமுதாய மாற்றத்தை முன்னெடுக்க வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தார்.

இந்நிகழ்வில் யாழ் மறைமாவட்ட கத்தோலிக்க இளையோர் ஒன்றிய நிர்வாக உறுப்பினர்களும், கிளிநொச்சி மறைக்கோட்ட இளையோர் ஒன்றிய ஆலோசகர் அருட்பணி ஸ்கரன்ராஜ் அடிகளாரும் பங்குபற்றனர்.

## புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் புதிய சிற்றாலயம்



யாழ் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் புதிய சிற்றாலயம், யாழ் மரியன்னை பேராலயப்பங்குத்தந்தைஅருட்பணிR.C.Xநேசராஜாஅடிகளாரின் அயராத முயற்சியினால், அரச நிதி யில் யாழ் கீறீன் பீல்ட்சனசமூக நிலையத்தினால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

21.06.2018 மாலை 4.30 மணிக்கு யாழ் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்கலாநிதி ப.யோ.ஜெபரட்ணம் அடிகளாரால் மேற்படி ஆலயம் திறந்து வைக்கப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது குரு முதல்வர் தனது மறையுரையில் சேமக்காலையின் புனிதத்துவம் பற்றி தெளிவுபடுத்தி, மேலும் மேற்கொள்ளவேண்டிய பல்வேறு வகையான பணிகள் குறித்தும் எடுத்துரைத்ததுடன், பங்குத் தந்தை மற்றும் ஆலயத்தை நிர்மாணித்த சனசமூக நிலையத்தினருக்கு நன்றிகளையும் தெரிவித்தார்.

## அனைவரிடமும் அன்பு குறைந்து வருவது கவலை தருகிறது

### - யாழ் ஆயர்



களுத்துறை தஹம் செவன இடைநிலைக் குருமடத்தில் அமைந்துள்ள திருஇருதய ஆண்டவர் ஆலயத் திருவிழாவில் திருப்பலி நிறைவேற்றிய யாழ் ஆயர் பேரருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தனது மறையுரையில் அனைவரிடமும் அன்பு குறைந்து வருவது கவலை தரும் விடயமாக அமைவதுடன், திரு இருதய ஆண்டவரிடம் அன்பைப் பெற அருள் வேண்டுவோம் எனக் குறிப்பிட்டார்.

ஆயர் அவர்கள் தனது மறையுரையில் பாவித்து விட்டு எறிகின்ற ஒரு காலா சாரத்தை (Use and Throw) நாம் மனிதர்களிடத்திலும் மேற்கொண்டு வருவதால் இன்று பலரையும் தேவைகளுக்கு மாத்திரம் பயன்படுத்தி, எமது சுயநலங்களை நிறைவேற்றிய பின் அவ்வுறவுகளை கைவிட்டு விடுகின்ற வேதனையளிக்கும் சம்பவங்களே எம் மத்தியில் மலிந்து இருப்பதாகவும், இந்நிலையை மாற்றியமைக்க கிறிஸ்தவர்களாகிய நாம் முன்மாதிரியாக செயற்படவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இடைநிலைக் குருமட அதிபர் அருட்பணி சிசில் ஜோய் பெரேரா மற்றும் குருக்கள், துறவியர், குருமட மாணவர்கள், இறை மக்கள் எனப் பலரும் திருஇருதயப் பெருவிழாவில் கலந்து கொண்டனர்.

## முல்லை மறைக்கோட்டத்தில் நற்கருணைப் பேரணி





இயேசுவின் திருஉடல் திருஇரத்தப் பெருவிழாவை சிறப்பிக்கும் முகமாக முல்லை மறைக்கோட்டத்தின் புதுக்குடியிருப்பு இரணைப்பாலை பங்குத் தந்தையர்களின் ஒழுங்கமைப்பில் அருட்சகோதரிகள் பங்கு மக்கள் இணைந்து நற்கருணைப் பேரணியை முன்னெடுத்தனர்.

புதுக்குடியிருப்பு குழந்தை இயேசு ஆலயத்தில் இரணைப்பாலை பங்குத்தந்தை அருட்பணி லியோ ஆம்ஸ்ரோங் அடிகளாரின் (தொடர்ச்சி 12ம் பக்கம்)

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா:127:1)

# எமது எண்ணம்

## திருவிழாக்கள் நமக்கெதற்கு?

ஆலயத் திருவிழாக்கள் அமோகமாக நடைபெற்று வரும் காலமிது. நவமான நவநாள் வழிபாடுகள்; அடுக்குமொழித் தலைப்புகளில் கண்கவரும் வர்ணங்களில் துண்டுப் பிரசுரங்கள் ; நெஞ்சை அள்ளும் சோடனைகள்; தேர்கள்; திருச்சுரூபப் பவனி ; வெளிநாட்டு உறவுகளின் வருகை; உள்நாட்டு உறவுகளின் கலகலப்பு என ஆலயத் திருவிழாக்கள் அமளிதுமளியாய் அரங்கேறுகின்றன. முகவரிகளைத் தொலைத்துவிட்டு அலைவது போல அர்த்தத்தை தொலைத்துவிட்டு திருவிழாக்களில் திசை மாறித் திளைக்கின்றோம் என்பதே யதார்த்தம்.

ஆன்மீகம், அறநெறி, கடவுள் பக்தி, பிறர் அன்பு ஆகிய விழுமியங்களை மனித மனங்களில் விதைக்கவே திருவிழாக்கள் மற்றும் நவநாட்கள் உருவாக்கப்பட்டன. புனிதர்களின் பாதையில் நாம் வாழ்ந்து புனிதமாக்கப்பட வேண்டும் என்ற உன்னத நோக்கத்திற்காகவே திருவிழாக்கள் உருவமைக்கப்பட்டன. இத்தகைய நன்நோக்குகளை அடைய இன்றைய திருவிழாக்களின் போக்குகள் வழிசமைத்துள்ளனவா? திருவிழாக்களில் புனிதத்துவம் கட்டிக்காக்கப்படுகின்றனவா? வழிபாடுகள் அர்த்தம் பெற்று வாழ்க்கையுடன் இரண்டறக் கலக்கின்றனவா?

மனிதன் காக்கத் தவறும் எதுவும் வன்முறையே ஆகும். புனிதம், மனிதம், அன்பு, அமைதி என்பவற்றை சீர்குலைக்கும் காரணிகளும், செயல்களும் நம்மிடம் அதிகரித்து வருவதனால் தான் இன்றைய உலகில் "எங்கும் வன்முறை எதிலும் வன் முறை" என்ற சித்தாந்தம் ஆல விருட்சமாய் கிளைபரப்பி நிற்கின்றது.

தன்னைப்பற்றி மட்டுமே சிந்திக்கும் சுயநலம் ஒரு வன்முறை. ஏழைகளை நினைத்துப் பார்க்காத ஆடம்பரம் ஒரு வன்முறை. துன்புறும் மக்களின் குரலை கேளாமை, கண்டு கொள்ளாமை ஒரு வன்முறை. பெண்களை சமமாக எண்ணாத ஆணாதிக்கம் ஒரு வன்முறை. பணிசெய்யாத அதி காரம் ஒரு வன்முறை. சாதி வேறுபாடு பார்க்கும் இழிந்த குணம் ஒரு வன்முறை. இயற்கையை எம் இலாபத்திற்காக அழிப்பது ஒரு வன்முறை. தொழிலாளிகளின் உழைப்பைச் சுரண்டும் முதலாளித்துவம் ஒரு வன்முறை. செயலில் செயற்படாத ஆன்மீகம் ஒரு வன்முறை. இறையியலுக்குக் கொடுக்கவேண்டிய முதன்மையை உலகியலுக்கு கொடுப்பது ஒரு வன்முறை. பக்தியை பகட்டாக்கி வாழ்வது ஒரு வன்முறை.

இந்த வகையில் இன்று நாம் வாழ்வது வன்முறைக் கலாசாரத்தில் மட்டுமே என்பது மறுக்க முடியாத அதேவேளை கசப்பான ஓர் உண்மையாகும்.

கிறிஸ்தவம் என்பது விசுவாசத்தை விதைக்கவும் மனிதத்தை மதிக்கவும் கற்றுத்தரும் சமயம். கிறிஸ்தவம் வாழப்படவும் வேண்டும் ; வாழ்விக்கவும் வேண்டும். ஆனால் இன்று "தங்கக் கூரையின் கீழ் கடவுளர்கள்: மர நிழலின் கீழ் மனிதர்கள்" என்ற நிலைதான் காணப்படுகின்றது. இந்த நிலை நீடிக்குமானால் கிறிஸ்தவம் என்பது சடங்காசாரங்களுக்குள் மற்றும் பகட்டு ஆடம்பரங்களுக்குள் சமாதியாகி விடும் என்பதில் எந்த ஐயமும் கிடையாது.

**"உங்கள் திருவிழாக்களை நான் வெறுத்து அருவருக்கின்றேன். உங்கள் வழிபாட்டுக் கூட்டங்களில் எனக்கு விருப்பமே இல்லை. உங்கள் படையல்களை எனக்கு நீங்கள் செலுத்தினாலும் நான் ஏற்க மாட்டேன். என் முன்னிலையில் நீங்கள் இரைச்சலிட்டுப் பாடும் பாடல்களை நிறுத்துங்கள். உங்கள் வீணைகளின் ஓசையை நான் கேட்கமாட்டேன். மாறாக நீதி வெள்ளமெனப் பொங்கி வருக. நேர்மை வற்றாத ஆறாக பாய்ந்து வருக" (ஆமோஸ் 5:21-24)** என ஆண்டவர் எம் திருவிழாக்களையும் வழிபாடுகளையும் கண்டித்து எம் ஆன்மீகம் அமைய வேண்டிய பாதையை வெளிச்சமிட்டுள்ளார்.

ஆன்மீக வாழ்வில் நாட்டம் கொள்கிறோமா? அல்லது ஆட்டம் காண்கிறோமா? என்பதே இன்றைய சிந்தனைக்குரிய விடயமாகும். கடவுளுக்குப் பதில் கட்டடங்களும், ஆன்மீகத்துக்குப் பதில் ஆடம்பரங்களும், பக்திக்குப் பதில் பட்டாடைகளும், விசுவாசத்திற்குப் பதில் விசமத்தனங்களும் நம்மை ஆட்கொண்டுள்ள நிலையில், "சக்கேயுவே இறங்கி வா" என்ற இயேசுவின் திருவாய்மொழி எமக்கு சமர்ப்பணம் செய்யப்படுகின்றது. இயேசுவின் குரலுக்கு செவிமடுத்து இவற்றிலிருந்து இறங்கி வருவோம்.

திருநற்கருணை ஆசீர்வாதத்தில் சிரம் தாழ்த்தி பணிந்து வணங்கிய நாம் இன்று "ஐ பாட்டில்" பதிவு செய்ய எழுந்து நிற்கிறோம். அன்று புனிதர்கள் பவனி வந்தபோது கைகள் கூப்பி வணங்கி நின்ற நாம் இன்று கைப்பேசிகளுடன் கைகளைக் கூப்புகின்றோம். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் திருப்பலிகள் கேளிக்கைக் காட்சிகள் அல்ல என அண்மையில் குறிப்பிட்டிருந்தமை இங்கு மனம்கொள்ளத்தக்கது.

எருசலேம் ஆலய திருவிழாவில் இயேசுகிறிஸ்து சவுக்கெடுத்து வியாபாரிகள், கொள்வோர், கொடுப்போர் அனைவரையும் கலைத்துவிட்டு "என் வீடு செபவீடு; அதை கள்வர் குகையாக் காதீர்கள்" என எச்சரித்தமை நாம் அனைவரும் அறிந்த உண்மை. அந்த எச்சரிக்கை நமக்கும் தான் இன்று விடுக்கப்படுகின்றது. திருவிழாக்களை அர்த்தத்தோடு கொண்டாடி இறை விசுவாசத்திலும், இறை வார்த்தையிலும் ஆழமாக வேரூன்றி நின்று புனிதர்களின் பாதையில் நாமும் அடியெடுத்து வைத்து, ஆண்டவனின் அருளை நிறைவாக பெற்றுக்கொள்வதே திருவிழாக்களின் நிதர்சனமாக அமைய வேண்டும். **ஆலயங்களை மட்டுமல்ல எம் மனங்களையும் கள்வர் குகை ஆக்காதிருப்போம்.**

அருட்பணி.எஸ்.எமின்சிலி றொஷான்

# உலகளாவிய கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை நூற்று நாற்பது கோடி

உலகளவில் கத்தோலிக்கரின் எண்ணிக்கை அதிகரித்து, 140 கோடியாக உயர்ந்துள்ளது எனவும் ஆயர்கள், நிரந்தரத் திருத்தொண்டர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளன எனவும், அருட்பணியாளர்களின் எண்ணிக்கை குறையாமலும் அதே நேரம் துறவறத்தார் மற்றும் குருத்துவ மாணவர்களின் எண்ணிக்கை குறைந்தும் உள்ளன எனவும் திருஅவையின் ஆண்டு புள்ளி விபரநூல் கூறுகிறது.

5353 ஆயர்களும், 46,312 நிரந்தர திருத்தொண்டர்களும் உள்ளனர் என்று கூறும் அந்நூல், 2010 இற்கும் 2016 இற்கும் இடைப்பட்ட காலத்தில், அருட்பணியாளர்களின் எண்ணிக்கை 0.7 விழுக்காடு அதிகரித்து அவ்வெண்ணிக்கை 4,12,236 இலிருந்து 4,14,969 ஆக அதிகரித்துள்ளது எனவும் தெரிவிக்கின்றது.

உலகளவில் திருமுழுக்குப் பெற்றுள்ள கத்தோலிக்கரின் எண்ணிக்கை 2015ம் ஆண்டில் 125 கோடியே 80 இலட்சமாக இருந்தது. அவ்வெண்ணிக்கை 2016ம் ஆண்டில் 129 கோடியே 90 இலட்சமாக அதிகரித்துள்ளது எனக்கூறும் அந்நூல், உலக அளவில் திருமுழுக்குப் பெற்றுள்ள கத்தோலிக்கரின் எண்ணிக்கை அமெரிக்காவில் அதிகம் (48.6%) எனவும், ஆபிரிக்காவில் கத்தோலிக்கரின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருகிறது எனவும், அக்கண்டத்தில் 2010ம் ஆண்டில் 18 கோடியே 50 இலட்சமாக இருந்த அவ்வெண்ணிக்கை 2016 ஆம் ஆண்டில் 22 கோடியே 80 இலட்சமாக உயர்ந்துள்ளது எனவும் கூறுகிறது.

ஆசிய மக்கள் தொகையில் 11 விழுக்காட்டினர் கத்தோலிக்கர் என்றும், இறை அழைத்தல்கள் ஆசியாவில் அதிகரித்து வருகின்றன என்றும் தெரிவிக்கும் அந்நூல் உலக மக்கள் தொகையில் அறுபது விழுக்காட்டினருக்கு மேல்வாழும் ஆசியாவில் தென்கிழக்கு ஆசியாவிலுள்ள 76 விழுக்காடு கத்தோலிக்கரில் அதிகமானோர் பிலிப்பைன்ஸ் நாட்டில் உள்ளனர் என்றும் இந்தியாவில் 2 கோடியே 20 இலட்சம் கத்தோலிக்கர் உள்ளனர் என்றும் கூறுகிறது.

2010ம் ஆண்டில், 7 இலட்சத்து 22 ஆயிரமாக இருந்த வார்த்தைப் பாடுகொடுத்த பெண் துறவி யரின் எண்ணிக்கை, 2016ம் ஆண்டில் 6 இலட்சத்து 59 ஆயிரமாகக் குறைந்துள்ளது எனவும் அப்புள்ளிவிபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.


# உலக கால்பந்து போட்டிக்கு திருத்தந்தை வாழ்த்து

ரஷ்யாவில் ஆரம்பித்துள்ள உலக கோப்பை கால்பந்து போட்டிக்குதன் வாழ்த்துக்களை தெரிவிக்கும் டுவிட்டர் செய்தியை திருத்தந்தை பிரான்சிஸ் வெளியிட்டுள்ளார்.

ரஷ்யாவில் நடைபெறும் கால்பந்து போட்டிகளைப் பின்பற்றுவோருக்கு என் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன். இந்த விளையாட்டு நிகழ்வு நற்சந்திப்புகளுக்கும், தோழமைக்கும் உதவுவதாக அமையவேண்டும் என திருத்தந்தை கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் ரஷ்ய ஆர்த்தடாக்ஸ் கிறிஸ்தவ சபையின் முதுபெரும் தந்தை கிரில் அவர்களும், ரஷ்ய அதிபர் விலாடிமிர் புடின் அவர்களும், இந்த உலக கால்பந்து போட்டி குறித்து தங்கள் வாழ்த்துக்களை வெளியிட்டுள்ளனர்.

கால்பந்து போட்டியையொட்டி ரஷ்யா வரும் வெளிநாட்டவர்களுக்கு உயர்ந்த விருந்தோம்பலையும், வரவேற்பையும் ரஷ்ய ஆர்த்தடாக்ஸ் கிறிஸ்தவ சபை அருட்பணியாளர்கள் வழங்க வேண்டும் என்ற விண்ணப்பத்தையும் முது பெரும் தந்தை கிரில் முன்வைத்துள்ளார் .

# சர்வாதிகாரப் பாதை மக்களை அழிப்பதற்கு முதல் படி



அவதூறான பொய்ப்பிரச்சாரம் மக்களை அல்லது நிறுவனங்களை அழிப்பதற்கு இட்டுச்செல்லும் முதல்படி என்றும், யூதர்கள் கொல்லப்பட்ட ஆஷ்விஷ் வதை முகாமில் முடிந்த சர்வாதிகாரப் போக்குகொண்டபலரின் செயல்கள் இதற்குச் சான்று என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறினார்.

சாந்தா மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில் திருப்பலி நிறைவேற்றிய திருத்தந்தை நாபோத் என்பவரின் உரிமைச் சொத்தான திராட்சைத் தோட்டத்தை அரசன் ஆகாபு வாங்க விரும்பியது பற்றிச் சொல்லும் முதல் வாசகத்தின் (1 அர.21,1-16) அடிப்படையில் மறையுரைச் சிந்தனைகளை வழங்கினார்.

அரசன் ஆகாபு அந்த திராட்சைத் தோட்டத்திற்குப் பணம் கொடுக்க முன்வந் தும் அது தன் மூதாதையரின் உரிமைச் சொத்து என்பதால் அதை அளிக்க மறுத்தார்.

நாபோத். ஆனால்ஆகாபு தனது கொடூரமான மனைவி ஈசபேலின் ஆலோசனையின் பேரில் பொய்யாகக் குற்றம் சாட்டப்பட்டு கொலை செய்யப்பட்டார். இறுதியில் அவரின் திராட்சைத் தோட்டமும் கவர்ந்து கொள்ளப்பட்டது.

நாபோத் தன் உரிமைச் சொத்துக்கு விசுவாசமாக இருந்ததால் மறைசாட்சியாகக் கொல்லப்பட்டார் என்றுரைத்த திருத்தந்தை, நாபோத்தின் கதை கொலை செய்யப்பட தீர்ப்பிடப்பட்ட இயேசு, புனித ஸ்தேவான் மற்றும் அனைத்து மறைசாட்சிகளின் கதைகளை ஒத்திருக்கின்றது என்று கூறினார்.

பலநாடுகள் அல்லது அரசுகளின் தலைவர்கள் இதே முறையை இன்றும் பின் பற்றுகின்றார்கள். முதலில் ஒரு பொய்யுடன் தொடங்குகின்றது. பின்னர் அதுமனிதரையும் சூழ்நிலையையும் கொலை செய்வதோடு முடிவடைகின்றது என்றும் திருத்தந்தை கூறினார்.

பலர் தீமையான பொய்ப்பிரச்சாரங்களால் அழிக்கப்படுகின்றனர் என்றும் கடந்த நூற்றாண்டில் இடம்பெற்ற சர்வாதிகாரத் தன்மைகள் இதற்கு எடுத்துக்காட்டுகள் என்றும் கூறிய திருத்தந்தை, புனித ஸ்தேவான் ஆற்றிய நீண்ட உரையிலிருந்த உண்மைக்குச் செவிகொடுக்காமல் அவரைக் கல்லால் எறிந்து கொல்வதை விரும்பினர். இது மனிதப் பேராசையின் விளைவு என்றும் கூறினார்.

# வயது முதிர்ந்தோர் குறித்த உலக விழிப்புணர்வு நாள்

*'மனித உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறை வழியாக விழிப்புணர்விலிருந்து செயல்திட்டத்திற்கு'* என்ற தலைப்பில் ஜூன் 15 ஆம் திகதி வயது முதிர்ந்தோரின் உரிமைகள் மீறப்படுவது குறித்த உலக விழிப்புணர்வு நாள் கடைப்பிடிக்கப்பட்டது.

2015 ஆம் ஆண்டிலிருந்து ஏறக்குறைய எல்லா நாடுகளிலும் வயதானவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது என்றும் இந்த வளர்ச்சி வளர்ந்த நாடுகளில் அதிகமாக உள்ளது என்றும் ஐ.நா. கூறியுள்ளது.

உலகில் வயதானவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் அவர்களுக்கு எதிரான உரிமை மீறல்களும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் ஏற்கனவே இந்நிலையை உலகில் பரவலாகக் காண முடிகின்றது எனவும் ஐ.நா. கூறியுள்ளது.

நாடுகளில் தேசிய அளவில் எடுக்கப்பட்ட ஆய்வின்படி வயதானவர்கள் துன்புறுத்தப்படுவது அதிகம் கண்டுகொள்ளப்படுவதில்லை எனவும், இதனால் இலட்சக்கணக்கான வயதானவர்களின் உடல் நலமும், மனித உரிமைகளும் பாதிக்கப்படுகின்றன எனவும் தெரிய வந்துள்ளது.

# இளையோர் இறைவார்த்தையின் ஒளியில் பயணிக்க வேண்டும்



**இ.அ.அமலரட்ணம்**

**முகவுரை**

ஒரு மனிதனுடைய வாழ்க்கைப் பயணத்தில் வாலிபப் பருவம் மிக முக்கியமானதாக இருப்பதோடு மட்டுமல்லாமல் அளவிடமுடியாத சவால்கள் நிறைந்ததாகவும் காணப்படுகிறது. சிறுவர்கள் என்ற நிலையில் இருந்து இளையோர் என்ற நிலைக்கு மாறுகின்ற போது பல்வேறுவிதமான போராட்டங்களுக்கு முகம் கொடுக்கின்றனர். சரியான முடிவை அல்லது சரியான தெரிவை எடுக்க முடியாமல் தடுமாறுவதனால் வாழ்க்கை பிறழ்ந்து போவதற்கு ஏதுவாகின்றது. இளையோரின் வாழ்வு முறைமைகள் பருவங்களுக்கு ஏற்ப மாறுகின்ற போது ஆரோக்கியமான உறவுடன் கூடிய உரையாடலும், நல்வழிப்படுத்துகின்ற ஆலோசனைகளும் அவர்களைப் புரிந்து கொள்கின்ற தன்மையும் அவசியமாகின்றது. தற்கால சூழமைவில் இளையோரின் போக்கிலும் வாழ்விலும் எதிர்மறையான சிந்தனைகள் இருப்பதால் தான் அவர்கள் மீது உலகத் திருச்சபை அதிக அக்கறை கொண்டு செயற்படுகின்றது. அத்துடன் அவர்களை மீண்டும் ஒழுக்கம் நிறைந்த வாழ்வுக்குள் கொண்டு வருவதற்கான முயற்சிகளையும் செயற்திட்டங்களையும் முன்வைத்துப் பணியாற்றுகின்றது.

**இளையோரின் மாதிரி யார்?**

நூற்றுக்கணக்கான இளையோர் கலந்து கொண்ட ஒரு கருத்தமர்வில் உங்களுடைய மாதிரி யார்? என்ற கேள்வி முன்வைக்கப்பட்டபோது பலரும் பிரபல நடிகர்களையும், நட்சத்திர விளையாட்டு வீரர்களையும், உலகம் நன்கறிந்த போராட்ட வீரர்களின் பெயர்களையே முன்வைத்தார்கள். ஒருவருமே "கிறிஸ்துவைப் போல்" என்ற வார்த்தையைக் கூறவில்லை. இதற்குக் காரணம் இவர்களுக்குக் கிறிஸ்துவின் வாழ்வையும் அவரே எமது வாழ்வின் முன்மாதிரி என்பதையும் எவருமே கற்பிக்கவில்லை. இவை குழந்தைகள் வளருகின்ற போது குடும்பத்தில் பெற்றோரால் ஊட்டப்பட வேண்டிய விடயம். குடும்பத்தில் பிள்ளைகள் உருவாகும் போது கிறிஸ்துவின் போதனைகளையும் வாழ்வையும் எடுத்துக்கூறி பெற்றோரும் சாட்சியாக வாழும்போது பிள்ளைகள் நல்ல படியாக உருவாகுவார்கள். **"குழந்தையும் வளர்ந்து வலிமை பெற்று ஞானத்தால் நிறைந்து கடவுளுக்கு உகந்ததாய் இருந்தது" (லூக்.2:40)** என்ற இறைவார்த்தை இதை உணர்த்தி நிற்கின்றது.

**தேர்வுகள் நிறைந்தது இளம் பருவம்**

இளமைப் பருவத்தில் இளையோர் வேகம் நிறைந்தவர்களாகக் காணப்படுகின்றனர். அதனால் அவர்கள் எடுக்கும் முடிவுகள் தவறானதாகப் போய் விடுகின்றன. இப்பருவத்தில் தன் மதிப்பீடுகளைத் தேடி அலைகின்றான் தன் விருப்பங்களைத் தேர்வு செய்வதில் வேகம் காட்டுவதால் தவறிழைக்கின்றான். தன்னுடைய தொழிலைத் தேடுவதிலும் தன்னுடைய வாழ்க்கைத் துணையைத் தெரிவு செய்வதிலும் தானாகவே செயற்படத் தொடங்குகின்றான். உலகப் போக்கிற்கும் செல்வத்திற்கும் முன்னுரிமை கொடுத்து செயற்படுவதனால் கிறிஸ்தவ மதிப்பீடுகளை மறந்து போகின்றான். இளமைப் பருவத்தில் காணப்பட வேண்டிய எல்லா நற்குணங்களையும் இயேசுவிடம் முழுமையாகக் காணலாம். இயேசுவே இக்கால இளையோர் பின்பற்ற வேண்டிய தலைசிறந்த முன்னோடியாக விளங்குகிறார்.

**செல்வம் நிலைவாழ்வுக்குத் தடை**

இளமைப் பருவத்தில் பணத்துக்கும் சொத்துக்கும் முதன்மை இடம் கொடுப்பதால் எப்படியும் வாழலாம் என்ற மனப்பாங்கு ஏற்படுகின்றது. இன்று எமது சமுதாயத்தில் பல தீமைகள் தலைவிரித்தாடுவதற்கு இதுவே காரணமாகும். போதைப் பொருள் கடத்தலும் பாவனையும் மற்றும் வன்முறைக் கலாசாரமும் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். நிலை வாழ்வுக்கான வழி கேட்டு வந்த இளைஞனிடம் **"நீர் நிறைவுள்ளவராக விரும்பினால் உம் உடைமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடும். அப்பொழுது விண்ணகத்தில் நீர் செல்வராய் இருப்பீர். பின்பு வந்து என்னைப் பின்பற்றும்" (மத்.19:21)** என்றவுடன் அவன் முகவாட்டத்தோடு செல்வதை நாம் காணுகின்றோம்.

வாழ்வுக்குப் பொருள் தேவை அப்பொருள் நீதியான முறையில் உழைத்துத் தேடப்பட வேண்டும். அப்பொருளே நிலைத்து நின்று மகிழ்வான வாழ்வைத் தரக்கூடியது **"முறை கேடான செல்வங்களில் நம்பிக்கை வைக்காதே, பேரிடர் நாளில் அவற்றால் உனக்குப் பயன் இராது (சீராக் 5:8)** என்று சீராக்கின் ஞானநூல் கூறுகின்றது.

**இறைவனைச் சார்ந்திருக்க வேண்டும்**

இளமைப்பருவம் வலிமை மிக்கது. ஆற்றல் வாய்ந்தது துணிச்சலானது. வெற்றிகளைக் குவிக்க வேண்டும் என்ற ஆவல் கொண்டது இறைவனுக்குக் கொடுக்க வேண்டிய இடத்தைக் கொடுக்காமலும், இறைவார்த்தை விழுமியங்களைப் பின்பற்றாமலும் வாழ்ந்தால் மேற்கூறிய அனைத்தும் தவறான வழிக்கே இட்டுச் செல்லும். எனவே தான் கிறிஸ்து **"இறைவனது ஆட்சியையும் அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுங்கள். அப்போது இவையனைத்தும் சேர்த்து உங்களுக்குக் கொடுக்கப்படும்". (மத் 6:33)** என்கின்றார். **"மனிதர் உலகம் முழுவதையும் ஆதாயமாக்கிக் கொண்டாலும் தன் வாழ்வையே இழப்பாரெனில் அவருக்குக் கிடைக்கும் பயன் என்ன? அவர் தம் வாழ்வுக்கு ஈடாக எதைக் கொடுப்பர்" (மத். 16–26)** எனவே இளையோர் இறைவார்த்தையின் உண்மையை ஏற்றுக்கொண்டு கடவுளைச் சார்ந்து வாழவும், அன்பு, பரிவு, மன்னித்தல், மற்றவரைப் புரிந்து கொள்ளுதல் மற்றும் பகிர்தல், அறிவுரைக்கும் வழிகாட்டலுக்கும் மதிப்பளித்தல் போன்ற நற்பண்புகளைத் தம் வாழ்வில் கடைப்பிடிக்க அவர்களை வழிநடத்த வேண்டும்.

**ஊன் இயல்பின் இச்சைகளைக் கட்டுப்படுத்தல்**

மனிதன் இவ்வுலகில் உயிர் வாழ்வதற்கு மூவொரு இறைவனின் உன்னதமான தெய்வீக அன்பே காரணமாக இருக்கின்றது. இன்று உலகின் போக்கும், சமூகவலைத் தளங்களும் இலத்திரனியல் சாதனங்களின் பயன்பாடும் ஊன் இயல்பின் இச்சைகளைத் தூண்டுபவையாக அமைகின்றன. **"உங்கள் உடல் நீங்கள் கடவுளிடம் இருந்து பெற்றுக் கொண்ட தூய ஆவியார் தங்கும் கோவில் என்று தெரியாதா" (1 கொரி 6 : 13–19)** என்ற இறைவார்த்தை வழியாக புனித பவுலடியார் எமது உடலின் புனிதத் தன்மையை உணர்த்தி நிற்கின்றார். ஊன் இயல்பின் பாவங்களில் இருந்து விடுபட இளையோருக்கு அறிவுரை கூறுவதோடு ஆன்மீக செயற்பாடுகளில் வளர ஊக்கம் கொடுக்க வேண்டும். அத்தோடு குடும்பமாக செபிக்கவும் திருப்பலிகளில் பங்குபற்றவும் இறைவார்த்தையை வாசித்துத் தியானிப்பதன் ஊடாக ஆன்மீகத்தின் மேன்மையை உணர்ந்து கொள்ளச் செய்யவேண்டும். புனித பவுல் கிறிஸ்துவால் ஆட்கொள்ளப்பட்ட பின் ஆன்மீக வாதியாக மாறியது போல எமது இளையோரும் கிறிஸ்துவால் ஆட்கொள்ளப்பட நாம் கருவிகளாக உழைக்க வேண்டும்.

**முடிவாக**

இளையோருக்கு என்று அர்ப்பணிக்கப்பட்ட இவ்வாண்டில் இறைமகன் யேசுவை இளையோர் மாதிரியாகக் கொண்டுவாழ வழிநடத்துவோம். ஏனென்றால் இளைஞனுக்கு இருக்க வேண்டிய அத்தனை நற்பண்புகளையும் அனைத்து கிறிஸ்தவ மதிப்பீடுகளையும் தன்னகத்தே கொண்டு கிறிஸ்து வாழ்ந்து காட்டியிருக்கின்றார். தீமை எதுவும் அவரை அணுகவில்லை. அழிந்து போகின்ற இவ்வுலக செல்வங்களில் நாட்டம் கொள்ளாமல் மறுவுலக செல்வங்களில் நாட்டம் கொண்டுவாழவும், நம்பிக்கையோடும் எதிர்நோக்கோடும் தம் வாழ்வில் தீயோனை எதிர்த்துப் போராடவும் வழிகாட்டுவோம். சிறந்த இறையாட்சிக்குரிய கிறிஸ்துவின் பண்புகளைத் தாங்கி வாழ்கின்ற இளையோர் சமுதாயம் உருவாக இறை அருள் வேண்டி நிற்போம்.

---



## கிரேக்க சிலுவை

**இயேசுவின் இறப்பு வரை சிலுவை என்பது துன்புறுத்தல், அவமானம் மற்றும் மரணத்தின் சின்னமாக விளங்கியது. இயேசுவின் இறப்பின் பின் சிலுவை நிலைவாழ்வின் சின்னமாகியது. அருள்தரும் பேரின்பத்தின் சின்னமாகியது. ஒளியின் சின்னமாகியது. நல்லிணக்கத்தின் சின்னமாகியது. இவ்வுலகில் காணப்படும் பலவிதமான பல் கலாசாரங்களுக்கு உட்பட்ட சிலுவைகளைப் பற்றிய மறை அறிவையும், ஆன்மீக அறிவையும், அனுபவத்தையும் மையமாகக் கொண்டு பல்வேறு வகையான சிலுவைகளின் வடிவங்களையும் அவற்றிற்கான விளக்கங்களையும் காட்சிப்படுத்தியது மட்டுமன்றி, சிலுவைகளின் சரித்திரம் என்னும் நூலிலும் பதிவு செய்துள்ளேன்.**

**அருட்பணி சிசில் ஜோய் பெரேரா, அதிபர், "தஹம் செவன" இடைநிலைக் குருமடம், களுத்துறை.**

இது Crux Quadrata என்னும் பெயரால் அழைக்கப்படும். இச்சிலுவையின் சிறப்பம்சம் என்னவென்றால் சிலுவையின் நான்கு பாகங்களும் ஒரே அளவையும், நீளத்தையும் வடிவத்தையும் கொண்டது. கிறிஸ் நகரத்தின் வடிவக்கலைகளில் ஆர்வம் கொண்ட பலர் இதனால் தூண்டப்பட்டார்கள். உண்மையில் கீழைத்தேய பாரம்பரியத்தைக் கொண்ட பல ஆலயக் கட்டமைப்புக்கள் இந்தக் கிரேக்க சிலுவையைத் தமது ஆரம்பத் தள அமைப்பாகப் பயன்படுத்தினர்.

பலரது கருத்துப்படி உண்மையில் இது ஒரு சிலுவையை மட்டுமே பிரதிநித்துவப்படுத்துவது மட்டுமன்றி. உலகெங்கும் நற்செய்தி பரப்பப்பட்ட நான்கு திசைகளையும் குறிக்கிறது. இதன் விளைவாக இதனைச் சிலர் உலகச் சிலுவை ( Earth Cross) எனவும் அழைக்கின்றனர். கிரேக்க கலை மற்றும் சமய மரபுகளின் படி இதன் வடிவம் கணித முறைப்படி 13 கட்டங்களாக (square box) பிரிக்கப்பட்டது. ஆனால் கிறிஸ்தவ கலைகளின் அடிப்படையில் மையத்தில் உள்ள கட்டம் கிறிஸ்துவையும் அதனைச் சுற்றியுள்ள 12 கட்டம் அவரது 12 அப்போஸ்தலர்களையும் குறிக்கிறது.

கிரேக்க சிலுவையில் பல்வேறு வகை உண்டு. முதலாவது Voided சிலுவை அல்லது 4-L சிலுவையாகும். இது உலகின் நான்கு திசைகளையும் குறித்துக்காட்டுகிறது. இது crux gammata என்றும் அழைக்கப்படும். ஏனெனில் இச்சிலுவையின் வடிவம் ஒருவிதத்தில் கிரேக்க எழுத்துக்களில் ஒன்றான Gramma ஐ ஒத்தது. இரண்டாவது வகையானது ஒரு சதுரத்திற்குள் உள்ள சிலுவை. இது உலகிலே திருச்சபைக்குண்டான அதிகாரத்தைக் காட்டுகிறது.

"எனது சீடராக வரவிரும்பும் எவரும் தன் சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்" – இயேசுக்கிறிஸ்து



## இலத்தீன் சிலுவை

மேலைத்தேய கிறிஸ்தவத்தில் இச்சிலுவையானது பரவலாக்கப்படும் சிலுவையாகும். இது குறூக்ஸ் இமீசா என்றும் குறூக்ஸ் ஓடினரியா என்றும் அழைக்கப்படுகின்றது. மேலும் இயேசுவின் திருவுடலற்ற இவ்வகைச் சிலுவையானது மேலைத்தேய கிறிஸ்தவர்களால் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

தற்காலத்தில் இது மூவொரு கடவுளை அடையாளப் படுத்துகின்றது. சிலர் இதனை புரட்டஸ்தாந்து சிலுவை என்பார்கள். ஏனென்றால் கத்தோலிக்க ஆலயங்களில் காணப்படுகின்ற இயேசுக் கிறிஸ்துவின் உருவம் காணப்படாமையாகும். பல சீர்திருத்தச் சபைகளில் இதை முற்று முழுதாக மறுக்காமல் இவ்வமைப்பானது உயிர்த்த இயேசுவை வெளிப்படுத்துகிறது என்று கூறுகின்றனர்.

(தொடரும்...)



# குடும்பம் என்னும் கோவில்கள் அழியலாமா?

**முன்னுரை**

மனித வாழ்வு இறைவனின் கொடை. இந்த வாழ்க்கையில் இல்லறம் இனிமை நிறைந்தது. புனிதம் சேர்ந்தது. குடும்பம் என்ற கோவில் கூட்டுறவின் பெருமையை தன்னகத்தே கொண்டது. எனவே தான் குடும்பம் ஒரு கோயில் என்றும், குடும்பம் என்பது ஒரு குட்டித் திருச்சபை என்றும், குடும்பம் என்பது ஒரு பல்கலைக்கழகம் என்றும் பல சான்றோர்கள் சாட்சியம் பகர்ந்துள்ளார்கள்.

இன்னும் சிலர் "வீடு கற்களால் கட்டப்படுவது. குடும்பமோ இதயங்களால் கட்டப்படுவதாகும்" என்றும் குடும்பத்தின் மேன்மையையும் தரத்தினையும் உயர்த்திப் பேசுகின்றார்கள். ஆயினும் இன்று குடும்பம் என்ற வாழ்வுக்குள் சந்தேகம் என்ற சூறாவளியும், அலட்சியம் என்ற நிலநடுக்கமும், பிள்ளைகள் பெரும் பாரமாகவும், மனைவியானவள் சுமையாகவும் காரண காரியம் தேடப்பட்டு குடும்ப வாழ்வு அதன் புனிதத்துவத்தையும் மேன்மையையும் இழந்து வருகின்றது.

**பரிசுத்த விவிலியத்தில்**

'தந்தை வழி' சமுதாயமாக விளங்கிய இஸ்ராயேல் குலத்தில் தந்தையும் தாயும் மிகச் சிறப்பான இடம் வகித்தார்கள். குடும்பத்தின் எல்லா உரிமைகளும் தந்தையிடம் இருந்தது. தந்தை யாரை ஆசீர்வதிக்கிறாரோ அவர் மேன்மை அடைவார். அவர்களின் வாக்கு மிகவும் முக்கியமாக கருதப்பட்டது. ஆபிரகாம் முதல் பல இஸ்ராயலேரின் வாழ்க்கையிலும் இந்த உண்மையைக் காணலாம். (மகனை உருவாக்கும் ரெபேக்கா ஆதியாகமம் 23ம் அதிகாரம்) (அன்னாள் 1 சாமுவேல் 1ம் அதிகாரம்) தாயும் முக்கியத்துவம் பெறுகிறார்கள்.எனவே தான் கவிஞனின் வைரவரிகளில்

**"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான்**
**மண்ணில் பிறக்கையிலே**
**நல்லவராவதும், தீயவராவதும்**
**அன்னை வளர்ப்பதினிலே"**

எனவே தான் குடும்ப வாழ்வில் அன்னையின் தியாகமும் அளவு கடந்த பாசமும் ஒரு குழந்தையை சமூகத்தில் வாழ்வு பெறச் செய்கின்றது.

வரலாற்றிலிருந்தே குடும்பம் என்ற கோவிலில் தாயும் தந்தையும் தெய்வமாக மதிக்கப்படுகின்றார்கள். இன்னும் போற்றப்படுகின்றார்கள். அதனால் தான் "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்ற வழக்கு நம்மில் நிலவுகின்றது.

எனவே தான் குழந்தையின் முதற் பள்ளி "தாயின் மடி" என்கின்றார் திருத்தந்தை 10ம் பத்திநாதர்.

**தந்தையின் கடமையும் பொறுப்பும்**

குடும்பம் என்ற குழுவை ஒழுங்கு செய்பவரும், அதனை உரிய முறையில் பாதுகாத்து நடத்தும் பொறுப்பும், கடமையும் குடும்பத் தலைவருக்கே உரியது. தந்தையின் அன்பும் தியாகமும் பிள்ளைகளை நேரிய வாழ்விற்கு இட்டுச் செல்லும். ஆபிரகாம் லிங்கன் தன் மகனின் ஆசிரியருக்கு எழுதிய கடிதத்தில் "என் மகனை அவனின் சொந்தக் கால்களில் நிற்பதற்கு கற்றுக் கொடுங்கள்" என்று எழுதினாராம்.

**அருட்பணி M.நிர்மலராஜ் CR**

பண்டிதர் நேரு அவர்கள் சிறையிலிருக்கையில் தன் மகள் இந்திராகாந்திக்கு எழுதிய கடிதங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. அது சிறந்த இலக்கியமாக திகழ்கின்றது. அந்த கடிதங்களே இந்திராவை ஒரு இரும்பு பெண்மணியாக உருவாக்கியது. எனவே தான் "தந்தையோடு கல்வி போகும்" என்பார்கள். "தந்தை சொல்மிக்க மந்திரமில்லை" என்பார்கள். தந்தையின் தலையான கடமை தமது பிள்ளைகளை கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிறப்படையச் செய்வது. ஆனால் இன்று பல குடும்பங்களில் பல தந்தையர்கள் தமது கடமையையும் பாரிய பொறுப்புக்களையும் மறந்து சுய இன்பங்களுக்கு அடிமையாகியும், பொறுப்பற்ற தன்மையிலும் முறையற்ற உயர்ச்சிகளை அடையத் துடிப்பதையும் காணக்கூடியதாக உள்ளது.

ஆசிரியர் ஒரு மாணவரிடம் "தண்ணீருக்குள் வாழும் உயிரினம் மூன்று எது என்று கேட்கின்றார்.மாணவன் கூறுகின்றான்: "ஒன்று தவளை, இரண்டாவது மீன். மூன்றாவது எங்க அப்பா" என்று கூறினான். இன்று பல குடும்பங்களில் தந்தையர்களின் தடுமாறிய வாழ்க்கை முறை குடும்பங்களில் பல சீர்கேட்டை உருவாக்குகின்றது.

**தாயெனும் தெய்வம்**

தூய அகுஸ்தீனார் ஆயர் பொறுப்பேற்ற சமயத்தில் விழா மேடையில் வீற்றிருந்தார். அப்போது பார்வையாளர் பகுதியில் அமர்ந்திருந்த தன் தாயிடம் தம் முத்திரை மோதிரத்தைக் காட்டினாராம்.

"அம்மா! உங்கள் மகன் ஆயராகி விட்டேன் பாருங்கள்" என்பது தான் அதன் பொருள். அவரின் தாயார் பதிலுக்கு தன் விரலில் அணிந்திருந்த தம் திருமண மோதிரத்தை காட்டினாராம். "இப்படிப்பட்ட ஆயரான உம்மை பெற்று வளர்த்ததே இந்த தாய்தான்" என்பது அதற்குப் பொருள். பிள்ளையின் பெருமை தாயின் கையிலும், தாயின் பெருமை பிள்ளையின் கையிலும் இருக்கின்றது. இதை ஒவ்வொரு தாயும் பிள்ளையும் உணர வேண்டும். எனவே தான் திருத்தந்தை 10ம் பத்திநாதரின் கூற்றுப்படி **"ஒரு மனித சமூகம் சுமூகமாக இயங்குவதற்கு அடிப்படையும் உயிரோட்டமுமாக இயங்குவது குடும்பமாகும்".**

திருச்சபை இன்று குடும்பத்தின் மூலமாகத்தான் மீட்புப் பணியை இவ்வுலகிற்கு வழங்கி வருகின்றது. எனவே தான் "தந்தை அகலாகவும் தாய் அதிலுள்ள எண்ணெயாகவும் இவர்களின் குழந்தைகள் எரியும் திரிகளாகவும் இருந்தால் அகல்விளக்கின் ஒளி போல குடும்பம் பிரகாசிக்கும்" என்று பகிர்கிறது பாலஸ்தீன பழமொழி. எனவே தான் குடும்ப உறவில் கணவன் மனைவிக்கிடையே விட்டுக்கொடுத்தும், ஏற்றுக் கொண்டும், புரிந்து கொண்டும் வாழும் போது குடும்பம் என்ற பூங்காவனத்தில் மகிழ்ச்சியும் அன்பும் பெருக்கெடுக்கும்.

**குடும்பத்தில் முதியோர்**

வயது முதிர்ந்தவர்கள் குடும்பத்திற்கு அணிகலன்கள் போன்றவர்கள். அவர்கள் மதிக்கப்பட வேண்டியவர்கள். போற்றிப் புகழப்பட வேண்டியவர்கள். இன்றைய இளைய தலைமுறையினர் இதை உணர்கின்றார்களா? நிச்சயமாக இல்லை. முதியவர்களை சுமையாக கருதுகின்றனர். வேண்டாத பொருளாக, செல்லாக் காசாக ஒதுக்கிவிடுகின்றனர். முதியோர் பழுத்த அனுபவமுடையவர்கள். அறிவு முதிர்ந்தவர். அவர்களைப் பேணிப்பாதுகாக்காமல் இருப்பதே துன்பத்தைத்தரும்.

"தீயினால் சுடப்பட்டவனுக்கு உய்வுண்டு. பெரியோரை பழித்தவனுக்கு உய்வில்லை" என்பார்கள். உலகை அறிந்து உணர்ந்த மூத்தோரது நட்பு சிறந்த வாழ்விற்கு வழிவகுக்கும். வந்த நோயை போக்குவதாகவும் இனி வருகின்ற நோயையும் தடுப்பதாகவும் அமையும். இன்றைய இளையோர் தம்மை விட வயதாலும், அறிவாலும், அனுபவத்தாலும் முதிர்ந்த பெரியோர்களுடன் நட்புக் கொள்ள வேண்டும். அவர்கள் காட்டுகின்ற நல்வழியில் நடக்க வேண்டும். அப்படி நடந்தால் குடும்பமானது கோயிலாக மலரும்.

**அன்பு தான் அடித்தளம்**

குடும்பம் என்ற கோவில் அன்பு என்ற பண்பால் தினமும் ஆராயப்பட வேண்டும். அன்பு எனும் நூலில் கட்டப்பட்ட கதம்ப மாலைதான் குடும்பம். சமுதாயத்தின் அச்சாணியான குடும்பத்திற்கு அன்புதான் அடித்தளமாக அமைகின்றது. அறம் எனப்பட்டதே இல்வாழ்க்கை என்றார் வள்ளுவர்.

குடும்பத்தின் நல்லறம் என்பது முதியோர்களின் வழிகாட்டலிலும், தாய் தந்தையின் தியாகத்திலும், சகோதர சகோதரிகளின் பாசத்திலும் பர்ணமிப்பதாக இருக்க வேண்டும். "Family is nothing else but adjustment" என்பது பொன் மொழி.

எனவேதான் குடும்ப வாழ்வில் உண்மை அன்பை கணவன் மனைவியிடையே ஆழப்படுத்தும்போது வாழ்க்கை மகிழ்ச்சியில் ஊன்றூறி மன அமைதி பிறக்க வழிகோலும்.

**முடிவுரை**

திருத்தந்தை 2ம் ஜோன் பவுலின் கூற்றுப்படி "குடும்ப வாழ்வு எப்படி இருக்கின்றதோ அப்படித் தான் இருக்கும் நாமும் ஏன் நாம் வாழும் இவ் உலகமும்". எனவே குடும்ப வாழ்வின் மேன்மையையும் புனிதத்துவத்தையும் மேம்படுத்த முயல்வோம். குடும்ப வாழ்வில் அன்பு, தியாகம், ஒற்றுமை, விட்டுக் கொடுக்கும் பண்பு, புரிந்து கொள்ளும் மனநிலை வளர கூடிச் செபிப்போம்.

**"கூடிச் செபிக் கும் குடும்பம் குதூகலமாக வாழும்"** என்ற வார்த்தையை மையமாக்குவோம்.

# நமது பாடங்கள் இதயங்களைத் தொடட்டும்

நீங்கள் முகங்கொடுக்க வேண்டியிருக்கும் பிரச்சினைகள் ஒன்றில் உங்களை வீழ்த்தலாம் அல்லது உங்களை வளரச்செய்யலாம். இது நீங்கள் அதனை எவ்வாறு கையாளுகிறீர்கள் என்பதைப் பொறுத்தது.

துரதிஸ்டவசமாக அநேகர் தமது வாழ்வில் கடவுள் நல்ல நோக்கத்துக்காக பிரச்சினைகளைப் பயன்படுத்துகிறார் என்பதைக் காணத் தவறிவிடுகின்றனர். அவர்கள் நிதானமின்றி செயற்பட்டு தமக்கு இப்பிரச்சினைகள் என்ன நன்மைகளைக் கொண்டு வரலாம் என்பதை அமைதியாக சிந்தித்துப் பார்க்காமல் அவற்றையிட்டு சினம் கொள்கின்றனர்.

**உங்கள் வாழ்வில் இறைவன் பிரச்சினைகளைப் பயன்படுத்தும் ஐந்து வழிகள் கீழே தரப்படுகின்றன.**

**01. உங்களை வழிநடத்துவதற்காக இறைவன் பிரச்சினைகளைப் பயன்படுத்துகிறார்.**

சிலவேளைகளில் உங்களை நகரச்செய்வதற்காக கடவுள் உங்களுக்குள் ஒரு நெருப்பை மூட்ட வேண்டியிருக்கிறது. பிரச்சினைகள் அநேக தடவைகளில் எமக்குப் புதிய வழிகளைக் காட்டி, எமது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்வதற்கு தூண்டுகோலாக அமைகின்றன. கடவுள் உங்கள் கவனத்தை ஈர்க்க முயல்கிறாரா? சில சமயங்களில் எமது போக்குகளை நாம் மாற்றுவதற்கு துன்பகரமான சந்தர்ப்பங்களும் தேவைப்படுகின்றன.

**02. உங்களைப் பரிசோதிக்க கடவுள் பிரச்சினைகளைப் பயன்படுத்துகிறார்**

ஆட்கள் தேயிலைப் பொதிகளைப் போன்றவர்கள். உள்ளே இருப்பது என்னவென்று அறிய வேண்டுமானால் அவைகளைக் கொதிநீரில் போட வேண்டும்.

கடவுள் ஒரு பிரச்சினையின் மூலம் உங்கள் விசுவாசத்தை சோதித்திருக்கின்றாரா? பிரச்சினைகள் உங்களைப் பற்றி ஏதாவது விடயங்களை வெளிப்படுத்துகின்றனவா? உங்களுக்கு பலவித பிரச்சினைகள் ஏற்படும்போது நீங்கள் மகிழ்ச்சியடைய வேண்டும். ஏனெனில் இப்பிரச்சினைகள் உங்கள் விசுவாசத்தைப் பரீட்சிக்கின்றன. இது உங்களுக்குப் பொறுமையைத் தரும்.

**03. உங்களைத் திருத்துவதற்காக கடவுள் பிரச்சினைகளைப் பயன்படுத்துகிறார்.**

சில பாடங்களை துன்பத்தின் மூலமும், தோல்வியின் மூலமுமே கற்றுக் கொள்கிறோம். நீங்கள் குழந்தையாயிருந்தபோது சூட்டடுப்பில் கைவைக்க வேண்டாம் என்று உங்கள் பெற்றோர் சொல்லியிருப்பார்கள். ஆனால் சூடுபட்ட பின்தான் நீங்கள் அதை உணர்ந்திருப்பீர்கள். சிலவேளைகளில் நாம் ஒரு பொருள், ஆரோக்கியம், பணம், உறவு போன்றவற்றை இழக்கும் போதுதான் அதன் பெறுமதியை உணருகிறோம். "இவ்வாறு எனக்கு நேர்ந்தது மிக நன்மையானதே. ஏனெனில் உமது சட்டங்களுக்கு அமைய அது எனக்குக் கற்றுத்தந்தது.

**04. கடவுள் உங்களைப் பாதுகாப்பதற்காக பிரச்சினைகளைப் பயன்படுத்துகிறார்**

ஒரு பிரச்சினை அதைவிட இன்னும் மோசமான ஒன்றினால் நீங்கள் பாதிக்கப்படுவதைத் தடுக்குமானால் அது ஒரு மறைமுகமான ஆசீர்வாதமே. சென்ற ஆண்டில் எனது நண்பர் ஒருவர் தமது மேலதிகாரி கேட்டுக் கொண்டபடி அறநெறிக்குமாறான ஒரு காரியத்தைச்

**அருட்பணி**
**மா.றேஜிஸ் இராசநாயகம்**

செய்ய மறுத்ததனால் வேலையிலிருந்து நீக்கப்பட்டார். அந்த நண்பருக்கு வேலையில்லாமல் போனது ஒரு பிரச்சினைதான். ஆனால் ஒரு வருடத்தின் பின் அவரது முன்னைய முகாமையாளரின் தவறான செயற்பாடுகள் வெளிச்சத்துக்கு வந்தபோது, ஒரு குற்றத்துக்காக கைது செய்யப்பட்டு சிறை செல்வதிலிருந்து அதுவே அவரைக் காப்பாற்றியது. **"நீ எனக்குத் தீங்கிழைக்க எண்ணினாய், ஆனால் கடவுள் அதை நன்மையாக்கினார்"**

**05. கடவுள் உங்களை நிறைவுடையவராக்க பிரச்சினைகளைப் பயன் படுத்துகிறார்**

பிரச்சினைகள் சரியாகக் கையாளப்பட்டால் அவை உங்களை நற்பண்புடையவர் ஆக்குகின்றது. உங்கள் வசதியை விட நற்பண்புடைமையில்தான் கடவுளுக்கு அதிக கரிசனை உண்டு. நித்திய காலத்துக்கும் நீங்கள் உங்களோடு எடுத்துச் செல்பவை இறைவனோடு உங்களுக்கிருக்கும் உறவு. உங்கள் நற்பண்புடைமை ஆகிய இரண்டும் தான்.

" எமக்குப் பிரச்சினைகள் ஏற்படும் போது நாம் மகிழலாம். கற்றுக் கொள்ளவும் பொறுமையைக் கடைப் பிடிக்கவும் அவை எமக்குத் துணைபுரிகின்றன. பொறுமை எம்மில் உறுதியான பண்புடைமையைக் கட்டியெழுப்புகிறது. நாம் அதைப் பயன்படுத்தும் ஒவ்வொரு முறையும் கடவுளிடம் எமது நம்பிக்கையை அதிகரிக்கச் செய்கிறது. ஈற்றில் எமது விசுவாசமும் நம்பிக்கையும் உறுதியாகவும் சீராகவும் ஆகிவிடுகின்றன. நீங்கள் அறிந்துகொள்ளாத, புரிந்துகொள்ளாத நேரத்தில்கூட கடவுள் உங்கள் வாழ்வில் செயற்பட்டுக் கொண்டுதான் இருக்கிறார். ஆனால் நீங்கள் அவருடன் ஒத்துழைக்கும்போது அது இலகுவாகவும் பயனுடையதாகவும் இருக்கும்.

## காவலன் கலசம்



# தாய்மொழியிலேயே ஆரம்பக்கல்வி தவறிழைக்காதீர்கள்....!!

அருட்பணி T.ரவிராஜ்

> **குடும்பமே ஒரு குழந்தையின் ஆரம்பப் பாடசாலை. அதில் பெற்றோர் முக்கிய பங்காளிகள். அவர்களே அக்குழந்தையின் ஆரம்ப ஆசிரியர்கள். எனவே தாய்மொழியில் ஆரம்பக் கல்வியைக் கற்கும் குழந்தையின் அறிவியல் உலகில் குடும்பத்தவர்களின் பங்களிப்பு அதிகமாக இருக்கவேண்டியது அவசியம்.**

**முகவுரை**

***"கல்வியென்னும் பயிருக்கு கண்ணீர் என்னும் மழை வேண்டும்"***

**என்று சிறு வயதில் நான் வாசித்த வாசகம் ஒன்று இன்னமும் என் மன-தில் பசுமரத்து ஆணி. கல்வியறிவு என்பதை நாம் இலகுவாகப் பெறவும் முடியாது, அதை நாம் இலகுவாக விடவும் முடியாது. இது ஒவ்வொரு மனிதனினதும் அடிப்படை உரிமை. இதற்காகத்தானே இலவசக் கல்வி முறையை எல்லோருக்கும் அறிமுகம் செய்தார்கள். இந்த வியாபார உலகத்தில் அனைத்திற்கும் ஓர் விலையுண்டு. அதில் கல்வியும் விதிவிலக்கல்ல. இதற்கு எம் தேசத்தில் காணப்படும் தனியார் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை எனக்கு சான்று பகருகின்றது. திருவள்ளுவன் கூற்றில் "கற்க கசடறக் கற்க, கற்றவை கற்றபின் நிற்க அதற்குத்தக" என்பதே கல்வி. ஆனால் இன்றோ அதில் ஓர் சிறிய மாற்றம். "கற்க கசடறக் கற்ற, கற்றவை கற்றபின் விற்க அதற்குத்தக" என்றே மாறிவிட்டது தற்போது எம் கல்வி.**

**1. மொழி**

மனித தொடர்பாடலுக்கான ஓர் ஊடகமே மொழி. மொழி பேச்சாகவோ அல்லது வார்த்தைகளை முறையாக ஒழுங்கமைப்புச் செய்யப்பட்ட எழுத்து வடிவமாகவோ அமையலாம். எனவே மொழி என்பது ஒரு குறித்த இனமோ அல்லது சமூகமோ அதன் மக்கள் தமது தொடர்பாடல்களை ஏற்படுத்திக் கொள்ள கையாளும் ஓர் வழிமுறையே. மொழியானது பிரதானமாக தொடர்பாடலுக்கும், அடையாளங்களை வெளிப்படுத்துவதற்கும், மனிதர் தம் கற்பனைகளை வெளிப்படுத்துவதற்கும், அத்தோடு நம் உணர்வுகளை தெரியப்படுத்துவதற்கும் மொழியை ஊடகங்களில் ஒன்றாகப் பயன்படுத்துகின்றனர்.

மொழியானது பேச்சு மொழியாகவோ, அடையாள மொழியாகவோ அமையலாம். பேச்சு மொழியானது தொண்டைக்குழியினுள் உள்ள உறுப்புக்களின் அசைவுகள் மூலம் ஏற்படுத்தப்படும் சத்தத்தின் விளைவாகும். அடையாள மொழியானது கைகள் அல்லது ஏனைய அங்க அசைவுகளால், அல்லது சைகைகளால், முகபாவனைகளால் வெளிக்கொணரப்படுகிறது. பொதுவா-கவே தொடர்பாடலின் முறைகளைக் கொண்டு மொழி வெவ்வேறு மொழிகளாக அடையாளம் காணப்படும். ஒட்டு மொத்தத்தில் மொழி என்பது மனித தொடர்பாடலுக்கானதோர் ஊடகம்.

**2. கல்வி**

கல்வி என்பது ஓர் விடயத்தைக் கற்கும் செயல்முறை; அறிவு, நுட்பம், விழுமியங்கள், நம்பிக்கை, பழக்கவழக்கங்களைப் பெற்றுக் கொள்ளும் செயற்பாடு. கற்றல் முறைகள் பல்வேறு வடிவங்களில் அமையலாம்; கதை கூறுதல், கலந்துரையாடல்கள், பாடம் கற்பித்தல், பயிற்சி அளித்தல், ஆய்வு செய்தல் போன்று பல்வேறு வகைப்படும். இலத்தீன் மொழியில் கல்வி என்னும் சொல்லிற்கு இணைச் சொல் "Educare" ஆகும். இதன் அர்த்தம் இருவகைப்படும்: 1. வளர்த்தல், 2. உயர்த்துதல். அதாவது ஒரு மனிதன் தனக்குள்ளிருக்கும் ஆற்றலை விருத்தி செய்வதற்கு கல்வி துணை புரிகிறது. தத்துவஞானி அரிஸ்ரோட்டில் கூறுவார் "கல்வி என்பது ஓர் மனிதனை பயிற்றுவிக்கும் செய்முறை. மனிதன் ஓர் சமூகத்தின் அங்கத்தவனாய் தனது இலக்கை அடைய அவன் தன் முழு மனத் திறனையும் பயன்படுத்தி கல்வியின் ஊடாக தன்னை பயிற்றுவிக்கிறான்". சோக்கிரட்டீசின் சிந்தனையில் கல்வி என்பது மனிதன் பிரபஞ்சத்தின் முறைமை பற்றிய சிந்தனையை வெளிக்கொணர்வதாகும்.

கல்வி ஆனது ஒரு மனிதனில் அறிவாற்றல் விருத்தி, கிரகிக்கும் திறன், முழு ஆளுமை விருத்தி, அனுபவ அறிவு, கற்றதைப் பிரயோகிக்கும் திறன் ஆகிய தாக்கங்களை ஏற்படுத்துகிறது. யுனெஸ்கோ அமைப்பின் அறிக்கையின் படி கல்வியானது ஒரு மனிதனில் உடல், அறிவு, உணர்வு மற்றும் ஒழுக்கம் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த நிறைவான வளர்ச்சியை ஏற்படுத்துவதையே தனது இலக்காகக் கொண்டிருக்க வேண்டுமென வலியுறுத்துகிறது.

**3. கல்வியில் மொழியின் பங்களிப்பு**

கற்றலில் மொழியின் பயன்பாடு மிகவும் பிரதானமானது என்பது யாவரும் அறிந்த உண்மை. மொழியானது வெறுமனே தொடர்பாடலுக்கு மாத்திரமன்றி, அறிவை அடைந்து கொள்வதில் மொழியின் பங்கு சிறப்பானது. சிந்திக்கும் திறன்களின் செயற்பாட்டில் மொழி ஓர் அங்கமாக முதலிடத்தைப் பிடிப்பதோடு, வெற்றிகரமான கற்கையில் அது இன்றியமையாத முன் நிபந்தனையாகவும் இருக்கிறது. அது மாத்திரமன்றி, அர்த்தங்களை வெளிக்கொணர்வதில் மொழி ஓர் கருவியாக பயன்படுத்தப்படுவதோடு கற்றலில் கற்றல் பெறுபேற்றினை மதிப்பிடுவதில் ஓர் வடிகட்டி போன்றும் செயற்படுகிறது.

பொதுவாக முறையான மதிப்பீடு என்பது எழுத்துப் பரீட்சையாகவோ வாய்மொழிப் பரீட்சையாகவோ இடம் பெறுகிறது. சுருங்கக் கூறின் கற்கை செயற்திறனில் புரிதலின் இலகு தன்மையை ஏற்படுத்தும் காரணிகளில் மொழி ஓர் ஊடகமாக சிறப்பான பங்கை வகிக்கின்றது என்பதே நாம் கண்டறிந்த உண்மை.

**4. ஆரம்பக் கல்வியின் அவசியம்**

ஆரம்பக் கல்வியானது எங்கே ஆரம்பமாகிறது? என்று கேட்போமானால் இக்கேள்விக்கு விடையாக ஓர் வரலாற்றுச் சம்பவத்தைத் தான் உங்களுக்குத் தருவேன்: ஒருமுறை தத்துவஞானி அரிஸ்டோட்டலிடம் ஒரு பெண் சென்று, எனது மகனுக்கு மூன்று வயதாகிறது, நான் அவனை எப்போது பாடம் கற்க அனுப்ப வேண்டும் என்று கேட்டாள். அதற்கு அவர் நீ ஏற்கனவே மூன்று வருடங்களும் பத்து மாதங்களும் தாமதமாகி விட்டாய் என்று பதில் கூறினார். எவ்வளவு ஆழமான கருத்து அவருடையது. ஒரு தாயின் கருவறையே ஒரு மனிதனின் ஆரம்ப பள்ளியறை. தாயின் சிந்தனையே ஒரு மனிதன் முதன் முதலாய் கற்றுக்கொள்ளும் வாழ்க்கைப் பாடம். "தாய்" மொழியே ஒரு மனிதன் கற்றுக்கொள்ளும் ஆரம்பக் கல்வியின் ஒரே ஊடகம்.

"முதற் கோணினால் முற்றும் கோணும்" என்று சொல்லுவார்கள். அதில் ஆழமான அர்த்தம் இருக்கிறது. ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது போன்று யுனெஸ்கோ (UNESCO) நிறுவனத்தின் அறிக்கையின்படி கல்வி என்பது ஒரு மனிதனின் உடல்சார், அறிவுசார், உணர்வுகள் மற்றும் ஒழுக்கம் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த நிறைவான வளர்ச்சியை ஏற்படுத்தும் செயல் முறையே. இதன் அடிப்படையில் ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் கல்வி என்பது அவனது அடிப்படை உரிமை என்பதனை கருத்திற் கொண்டு, அவனது ஆளுமை வளர்ச்சியில் ஆரம்பக் கல்வி என்பது மிகவும் முக்கியமானதும், அவசியமானதும் ஆகும்.

**5. ஆரம்பக்கல்வியூட்டலின் சிறந்த ஊடகம்**

யுனெஸ்கோ நிறுவனம் தனது 2008 ஆம் ஆண்டு அறிக்கையில் தாய் மொழியில் ஆரம்பக் கல்வி கற்பதன் சிறப்பும், அவசியமும் பற்றி வலியுறுத்துகிறது. ஒரு குழந்தை தனது ஆரம்பக் கல்வியை தாய்மொழியில் கற்கும்போது கற்றலின் இலகு தன்மையை உணர்வதோடு, பாடத்தின் விடயத்தையும் இலகுவாகப் புரிந்து கொள்கிறது. அத்தோடு கற்பிக்கப்படும் பாடத்தின் அறிவில் ஆழமும் கொண்டு விளங்குகிறது என்றும் குடும்பமே ஒரு குழந்தையின் ஆரம்பப் பாடசாலை, அதில் பெற்றோர் முக்கிய பங்காளிகள், அவர்களே அக்குழந்தையின் ஆரம்ப ஆசிரியர்கள் என்றும் அவ்வறிக்கை குறிப்பிடுகிறது. எனவே தாய் மொழியில் ஆரம்பக் கல்வியைக் கற்கும் குழந்தையின் அறிவியல் உலகில் குடும்பத்தவர்களின் பங்களிப்பு அதிகமாகக் காணப்படுவது இங்கே குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும். ஆனால் அதே குழந்தை தனது ஆரம்பக் கல்வியை வேற்றுமொழியில் கற்கும் போது முகம் கொடுக்கும் பிரச்சினைகள் அதிகமாகும். இதனால் பல சந்தர்ப்பங்களில் கற்றல் என்பது அக்குழந்தைக்கு கசப்பானதொரு விடயமாக மாறிவிடும் அபாயம் உண்டு.

**6. எம் தாய்மொழி - தமிழ்மொழி**

ஆங்கில மொழி கற்பதும் பேசுவதும் தவறு என்று நான் கூற வரவில்லை. மாறாக எம் இன்றைய சமூகத்தின் மனப்பாங்கினைத் தான் தவறு என்று கூற விரும்புகிறேன். இன்று அதி-கமான எம் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு ஆரம்பக் கல்வியை ஆங்கிலத்தில் கற்பிக்க விரும்புவதும் அதிலே அவர்கள் பெருமை பாராட்டுவதும் ஒரு வகையில் ஆங்கில மோகத்தின் ஒரு வடிவம் என்றே கூறவேண்டும். இந்த மனப்பாங்குதான் தவறானது என்று கூறுகிறேன். குடும்பமே ஒரு குழந்தையின் ஆரம்ப பாடசாலை. பெற்றோரே அக்குழந்தையின் ஆரம்ப ஆசிரியர்கள் என்று சொல்லுகிறோமே. எத்தனை பெற்றோர்கள் நீங்கள் ஆங்கில மொழியில் பாண்டித்தியம் கொண்டு வழங்குகிறீர்கள். சிந்தியுங்கள். ஆங்கிலத்தில் கற்கும் உங்கள் குழந்தைக்கு விளங்காத ஒரு விடயத்தையோ, அதன் வீட்டுப் பாடத்தையோ உங்களால் விளங்கப்படுத்த முடியுமா? இந்தக் கல்வி முறை தவறானது என்பது என் கருத்து.

எம் தாய்மொழியாம் தமிழ் மொழியின் இலக்கண கட்டமைப்பை பார்ப்போமானால், தமிழ் இலக்கணத்தை முறையே கற்ற ஒருவருக்கு உலகின் ஏனைய மொழிகளைக் கற்பது மிகவும் இலகுவாக இருக்கும் என்பது தெளிவாக விளங்கும். அது மாத்திரமன்றி, தமிழ் இலக்கியங்களை நன்கு கற்றறிந்த ஒருவர் அறிவில் ஆழம் மிக்க ஒருவராகத் திகழ்வார் என்பதில் ஐயப்பாடு இல்லை. ஏனென்றால் தமிழ் இலக்கியங்கள் ஆன்மீகம், அரசியல், விஞ்ஞானம், மெய்ஞானம் போன்ற பல விடயங்களை ஆழமாகவும், தெளிவாகவும் எடுத்துரைக்கின்றன. இதை நாம் அறிந்து கொள்வதும், அதை எம் பிள்ளைகளுக்கு அறிவுறுத்துவதும் மிகவும் அவசியமாகும்.

**முடிவுரை**

**தாயின் கருவறையே ஒவ்வொரு மனிதனினதும் முதல் பள்ளியறை. எனவே தாயின் பேச்சு மொழியும் அவளது அங்க மொழியுமே ஒவ்வொரு மனிதனும் கற்றுக் கொள்ளும் முதல் மொழி. ஒரு தாய் எந்த மொழியில் இயல்பாகவே சிந்திக்கிறாளோ அம்மொழியை கருவிலிருக்கும் அவளது குழந்தையும் இலகுவாகப் புரிந்து கொள்வது அதற்கு இயல்பாகிவிடும். வேற்றுமொழியில் ஒரு பிள்ளை தனது ஆரம்பக் கல்வியைக் கற்கும்போது மொழியையும் புரிந்து, பாடத்தின் பொருளையும் விளங்கிக்கொள்வது எவ்வளவு கடினம் என்பதை ஏன் நாம் புரிந்து கொள்ளவில்லை?**

**ஒரு புதிய மொழியைக் கற்றுக்கொள்வது எவ்வளவோ சிறந்த விடயம். நிச்சயம் ஒவ்வொரு மனிதனும் ஏனைய மொழிகளைக் கற்றுக்கொள்ள முயற்சி எடுப்பதை நாம் ஊக்குவிக்க வேண்டும். ஆனால் வேற்றுமொழியைக் கற்பதற்கு முன் தாய் மொழியை முறையாகக் கற்றுக்கொண்டால் மிகவும் மிகவும் சிறந்தது. அதுவே முறையான கற்றலுமாகும். தாய்மொழியில் ஆரம்பக் கல்வியை உங்கள் பிள்ளைகளுக்குக் கொடுக்கத் தவறாதீர்கள். அறிவு வளர்ச்சிக்கு மாத்திரமல்ல, உங்கள் பிள்ளைகளின் ஆளுமை வளர்ச்சிக்கும் அது உதவியாக இருக்கும்.**

# காவலன் கலசம்

## இரத்தத்தின் குரல்கள் இறைவனை நோக்கி கூக்குரல் இடுபவை

**"உன் சகோதரனின் இரத்தத்தின் குரல் மண்ணிலிருந்து என்னை நோக்கி கதறிக் கொண்டிருக்கிறது" (தொ.நூல் 4:10)**

யாங்கோ சீனாவின் சக்கரவர்த்தியாக கி.பி. 14ம் நூற்றாண்டில் ஆண்டு வந்தான். இவன் மகா கொடியவன். தட்டிக் கேட்பார் யாருமின்றி எதேச்சை அதிகாரப் போக்கில் ஆட்சி செய்து வந்தான். மிகவும் கொடுங்கோல் ஆட்சியாளன் என உலகம் வர்ணித்தது.

சீனாவிலே லிங்க் என்ற ஓர் இளைஞன் மக்களுக்காக, மக்கள் நலம் பேணும் மாமேதையாக வாழ்ந்து வந்தான். பிறருக்காக தன்னை அர்ப்பணித்து பிறர் பணிபுரிந்து வந்தவன். இறைபக்தி மிக்க ஓர் மறைத்தூதன். கொடுங்கோல் மன்னனான யாங்கோவை இறைவாக்கினராக கடிந்துரைப்பதில் துணிச்சல் மிக்கவன்.

ஒரு நாள் மாமன்னன் யாங்கோவை நேரிலே சந்தித்து "நீ ஒரு மக்கள் துரோகி. மக்களை சிந்திரவதை செய்பவன், அணுவணுவாக அவர்களை சாகடிப்பவன். அவர்களுக்கு அரசனாக இருப்பதற்கு உனக்கு அருகதை கிடையாது" என இழிந்துரைத்தான்.

கோபம் கொண்ட மாமன்னன் இளைஞனின் தலையை துண்டிக்கும்படி கட்டளையிட்டான். மன்னிப்புக் கேட்டால் உயிர் பிழைக்கலாம் எனவும் கூறினான்.

"இறந்த பின்பும் உன்னைத் துரோகி என்றே சொல்வேன் மன்னிப்புக் கேட்க மாட்டேன்" என துணிச்சலாகப் பதிலளித்தான். கொடிய மன்னன் முன்னிலையிலே லிங்கின் தலை வெட்டப்பட்டது. தரையிலே வழிந்தோடி உறைந்து நின்ற அந்த இளைஞனின் இரத்தத்தைக் கண்ட மக்கள் நடுங்கி வியந்து நின்றனர்.

"துரோகி" என்று சீன மொழியில் எப்படி எழுதுவார்களோ அவ்வாறே இரத்தக்கறையும் உறைந்திருந்தது.

லிங்க் இரத்த சாட்சியாக மரித்த பின்பும் அவனது இரத்தம் பேசியது. இரத்தத்தின் குரல்கள் விண்ணை முட்டி கடவுளையே அசைக்க வல்லது. ஏனெனில், "உன் தம்பியின் இரத்தக் குரல் என்னை நோக்கிக் கூப்பிட்டதே" என இறைவன் காயினை வினவினார்.

இயேசுவின் காலத்தில் திருமுழுக்கு யோவான் யூதேயாவின் பாலை நிலப் பகுதியில் போதித்து வந்தார். "மனந்திரும்புங்கள் ஏனெனில் இறையாட்சிநெருங்கி வந்து விட்டது" என அறைகூவல் விடுத்தார். திருமுழுக்கு யோவான் யூதேயாவின் பாலை நிலப் பகுதியில் போதித்து வந்தார். "மனந்திரும்புங்கள்" ஏனெனில் இறையாட்சி நெருங்கிவந்து விட்டது" என அறைகூவல் விடுத்தார்.

திருமுழுக்கு யோவான் மிகவும் நேர்மையானவர். உண்மை, நீதிக்காக குரல் கொடுத்தவர். அரசன் தவறு செய்தபோது அதனைத் துணிந்து கண்டித்து பேசியவர். அக்காலத்தில் ஏரோது என்பவன் யூதேயாவின் குறுநில மன்னன். இவன் தன் சகோதரன் மனைவியை தனது மனைவியாக வைத்திருந்தான்.

திருமுழுக்கு யோவான் ஏரோதிடம் "நீ அவனை வைத்திருப்பது முறையல்ல" எனச் சொல்லி வந்தான். ஏரோது அவரைக் கைது செய்து சிறையில் அடைத்தான்.

ஏரோதியாளும் தனது மகள் மூலம் திருமுழுக்கு யோவானின் தலையைக் கேட்டாள். ஏரோது



வும் தனது படைவீரிடம் யோவானின் தலையை வெட்டிவர ஆணையிட்டான். அவரது தலையை ஒரு தட்டில் வைத்துச் சிறுமியிடம் கொடுத்தான்.

வன்முறைகளால் சிந்தப்படும் இரத்தம் யூமியை நனைத்துக்கொண்டே இருக்கிறது. கடும் போக்குடைய அரச நடவடிக்கைகளால் பூமி சிவப்பாக மாறிக்கொண்டே இருக்கிறது. இரத்தத்தின் சப்தம் தினமும் ஒலித்துக்கொண்டே இருக்கிறது. எம் மண்ணிலும் எத்தனை இரத்தத்தின் குரல்கள் ஒலித்துக்கொண்டே இருக்கிறது. இறைவனை நோக்கி குரல்கள் எழும்பிக் கொண்டே இருக்கிறது.

வன்முறைகளும், அடக்குமுறைகளும், அடிமைத்தன செயற்பாடுகளும் ஒருபோதும் பிரச்சினைகளுக்கு தீர்வு ஆகாது. கொள்கைக்காக உயிர்த் தியாகம் செய்வது எவ்வளவு வீரத்தனம். கொள்கைப் பிடிப்பில்லாதவர்களே சமரசம் செய்து கொள்கிறார்கள். கொலைகளை நடாத்திக் கொண்டு சமரசம் செய்து கொள்ளும் உலகமாக இன்றைய உலகம் மாறிவிட்டது. இது கோழைத்தனம். தப்பு என்று சொல்லும் தைரியம் இப்போதெல்லாம் மங்கிப் போய்விட்டது. பிரச்சினையின் நீதி, அநீதிகளை மறந்துவிட்டு சமூகத்தில் சமரசம் செய்து கொண்டே போவது சரியான தீர்வு ஆகாது.

சீனாவில் லிங்க் என்ற இளைஞனைப்போன்று, புனித திருமுழுக்கு யோவானைப் போன்று எம் மண்ணிலும் அநீதிக்காக, உண்மைக்காக ஓங்கி ஒலித்த குரல்கள் எத்தனையோ இரத்த சாட்கிகளாக்கப்பட்டுள்ள நிலையில் தொடர்ந்தும் உண்மை, அநீதிக் காக குரல் கொடுக்காது சுய நலத்துடனும், சமரசம் செய்து கொண்டும் சமூக அக்கறையற்றவர்களாக வாழ்வது எவ்வகையில் நியாயம்? சமூகத்தில் ஒருவர் ஒருவர் மீது அக்கறை கொண்டவர்களாக இருப்போம்.

"நான் என்ன என் சகோதரனுக்கு காவலாளி-யோ" என்ற மனப்பாங்கினைத் தவிர்த்து வாழ்வோம்"

**அ.பீற்றர்**
**ஆசிரியர்**
**யா/கொழும்புத்துறை இந்து ம.வி**

## நிலை வாழ்வை உனக்குத் தருவேன்

என் சாயல் நீ
என் பாவனை நீ
அன்பு செலுத்தி
அருள் உயிர் தந்த
என் பிள்ளை நீ
மீட்புப் பெறுவதற்காய்
என் அன்பு மகனை
கல்வாரியில் பலிதந்தேன்
நாளும் பொழுதும் நீ
எனக்குள்ளே வாழ்வதற்காய்
சதையும் குருதியும் கொண்ட
நற்கருணை
கொடையாய்த் தந்தேன்
ஆனால் நீயோ
என் அன்பு மறந்து
பாதை மாறினாய்
உத்தம வாழ்வை உதறித் தள்ளி
ஊதாரியாக வாழ்ந்து
நிலை வாழ்வை இழந்தாய்
காயீனும் ஆபேலும்
கண்ட வாழ்வு
இன்று உனக்குள்ளே
மனித மாண்பை மறுத்து வாழ்கின்றாய்
விபசாரம் செய்தாள் என்று
அவளை என் முன்னே
கொண்டு வந்தோரின் வாழ்வு
உனக்குள்ளே இழையோடுகிறது
என் இதயக் கதவு எப்போதும்
உனக்காகத் திறந்துள்ளது
சரியான பாதையில் தடம் பதித்து
என்னிடம் திரும்பி வா
உன்னை நான் ஏற்றுக்கொள்வேன்

**இ.அ.அமலரட்ணம்**

## சாதிக்கக்க கிடைத்த சந்தர்ப்பமே இளமைப் பருவம்

இளமை இறைவன் தந்த கொடை. இளமையின் பலம் என்ன பலவீனங்கள் என்ன என்பதனை உங்கள் வாழ்வில் மதிப்பிட்டுப் பார்க்கக் கிடைத்த சந்தர்ப்பமாக ஒரு கணம் உங்களை நீங்களே எண்ணிப் பாருங்கள். சிறுபராயத்தில் சாதிக்க முடியாததை சாதிக்கக் கிடைத்த பருவமே இளமை. மனிதர்களில் புனிதர்களாகப் போற்றப்படுவோர் தம் சிறு சிறு நல்ல செயல்களால் இறை பாதையில் பயணித்து புனிதர்களானதை அவர் தம் வரலாறுகள் கூறுகின்றன. மனிதராகப் பிறந்த அவர்கள் தமது தூய மனத்துடன், தூரநோக்குடன் சவால்களை எதிர்கொண்டு சலனங்கள், சபலங்களை வென்று வாழ்வின் புனிதத்தை பிறர் மகிழ்வுடன் இறைபற்றுறுதியால் சாதித்து சரித்திரம் படைத்ததால் இன்று புனிதர்களாகப் போற்றப்படுகிறார்கள்.

இன்றைய இளமைக்கு பல சவால்கள் காத்திருக்கின்றன. இதனை வெல்லும் மனப்பக்குவம், தூர நோக்குடனான இலக்கை அடையும் வலிமை ஒவ்வொரு இளையோர்களினதும் மனத்திடத்தில் தான் தங்கியுள்ளது. உங்கள் மனதை நீங்களே வழிகாட்டுவீர்களா? அல்லது மற்றவர்களால் திசை திருப்ப சந்தர்ப்பம் கொடுப்பீர்களா? என்பதை சித்தித்துச் செயற்படும் காலம் உங்கள் இளமைப் பருவம் ஆகும்.

"இளையோர் தவறான வழியில செல்கிறார்கள்". "அவர்களைத் திருத்தவே முடியாது", "அவர்கள் அப்படித்தான்" என குற்றம் சுமத்துவோரின் வார்த்தைகளைக் கேட்டு குழப்பம் அடையவேண்டாம். பிறர் குறைகளைக் கூறி தம் தவறுகளை மறைப்போரின் வார்த்தைகளுக்கு உரம் சேர்க்காது உங்கள் நற்செயல்களை, ஆன்மீக பற்றுறுதியின் வெளிப்பாடுகளை உங்கள் நல்ல தொடர்பாடலாலும், நற்செயல்களாலும் வெளிப்படுத்த இன்றே சிறு சிறு நல்ல செயல்களைத் தொடங்குங்கள். "நீங்கள் சிறிதாக நல்லதைச் செய்யுங்கள் நானும் என்னால் முடிந்ததைச் செய்கிறேன். எல்லோரும் சேர்ந்து செய்வது பெரிதாக மாறும்" என்ற அன்னை திரேசாவின் வார்த்தைகள் வழிகாட்ட இறைவார்த்தை வழிநின்று சாதிக்கக் கிடைத்த இளமைப் பருவத்தை சாதனையாக்கிக் கொள்ளுங்கள்

**செ.யோசப் பாலா**
**உளசமூக சீராளன்**

## இளையோர் காவியம் 08

நீ
பத்துமாதம்
கருவறையில் செதுக்கப்பட்ட
சிற்பம்

பூமியில்
காவியத்துக்காக பிறந்த உன்னை
அறிமுகப்படுத்துகிறது
அவமானம்

உன்னிடம்
இல்லாமல் போய்விட்டது
ஆதாம் ஏவாளுக்கு வந்த
வெட்கம் கூட

உடல்கள் மட்டுமல்ல
அரைகுறை ஆடைகளும் செய்கிறது
விபச்சாரம்

நாங்களே
ஆபாசங்களை உருவாக்கினால்
குணமடையாது திருந்தாத
நோய்

நீ
கடவுள் வரவிரும்பாமல்
பாவமுட்களைக் குவித்து வைத்திருக்கிறாய்
வழிகளில்

ஆன்மீகம்
சம்பந்தமான நிறைய வேலைகள்
கோவில்களை விட
உன் மனவீட்டில் தான் இருக்கிறது

உனக்கும்
ஒழுக்கத்திற்குமிடையில்
ஏற்பட்ட இடைவெளி
பொறிவெடி

ஆபத்து
வெடிகுண்டில் மட்டுமல்ல
ஒழுக்கக்கேட்டிலும்
இருக்கிறது

நீ
எப்படியும் வாழலாம் என்று
வாழ்க்கைக்குள் இறங்கவே
கூடாது
உனக்கு தப்புவதற்கே
வழிகள் இல்லாமலே
போகும்

உன்னை மட்டுமல்ல
மற்றவர்களையும்
மனம் மாற்று

வாழ்க்கை
சும்மா ஆடி அடங்கினால்
வெறுமை
வரலாறை
தேடி அடங்கினால்
புதுமை

(தொடரும்...)

**உபிரோவியன்**

## காவலன் கலசம்

# கத்தோலிக்க கூத்துமரபின் 'ஒரு காலச்சுவடு' அண்ணாவியார் அ.பாலதாஸ்

கலைப் பாரம்பரியம்மிக்க பாசையூர் மண்ணில் பிறந்த அமரர் அண்ணாவியார் அ.பாலதாஸ் அவர்களின் கலைப்பணியானது ஈழத்தின் அரங்க வரலாற்றிலும், கத்தோலிக்க அரங்கக்கலை வளர்ச்சியிலும் மறக்கப்பட முடியாததாகும். பாசையூரில் எட்டு வயதில் இருந்தே கூத்துக்களில் நடிக்கத் தொடங்கிய இவர் நாடகத்துறைக்காகவே தன்னை கரைத்துக்கொண்டவர். நடிகனாக, நெறியாளனாக, சிறந்த ஆர்மோனிய வித்துவானாக, எழுத்தாளனாக பல்வேறு தளங்களில் செயற்பட்டு கத்தோலிக்க கூத்து மரபில் குறிப்பிட்ட காலத்தில் அளப்பரிய பணிகளை ஆற்றி உள்ளார். கடந்த 26.04.2018 அன்று தனது 78 ஆவது வயதில் இவ்வுலகை நீத்த அவருக்கு அஞ்சலி செலுத்து முகமாக, அவரது பணி தொடர்பான முக்கியத்துவத்தினை இக்கட்டுரை மூலமாக இன்றைய கலைக்காவலன் பகிர்ந்து கொள்கின்றது.

**கூத்துக்கலையில் மாணவனாக..**

பாசையூரில் 26.04.1940 அன்று பிறந்த அமரர் பாலதாஸ் அவர்கள், 1948 இல் தனது எட்டு வயதில் கண்டி அரசன் கூத்தில் குமாரிகாமியின் மகனாக நடித்ததில் இருந்து கூத்துத் துறையில் காலடி எடுத்து வைத்தார். புனித அந்தோனியார் வித்தியாலயம், புனித பத்திரிசியார் கல்லூரி என்பவற்றில் தனது கல்வியைத் தொடர்ந்தவர். பாட-சாலை நாடகங்களிலும் நடித்தார். சிறந்த உதைபந்தாட்ட வீரனாகவும் திகழ்ந்தார். தனது கிராமத்தில் அண்ணாவியார் பஸ்ரியாம்பிள்ளை, அண்ணாவியார் இராஜேந்திரம், அண்ணாவியார் மடுத்தீஸ், பாவிலுப்பிள்ளை போன்றவர்களின் கூத்துக்களில் தனது கிராமத்தில் நடித்து வந்தவர். மரபு வழிக்கூத்துக்களின் அரிச்சுவடிகளைக் கற்றறிந்தார். சிறந்த இராயபாட் நடிகனாக தனது கிராமத்தில் புகழ் பெற்றார். அவ்வாறே முதன் முதலாக கூத்துக்களுக்கு ஆர்மோனியம் வாசித்தவராகிய 'சுருதி மரியான்' என அழைக்கப்படுகின்ற மரியாம்பிள்ளை அவர்களிடம் முறையாக ஆர்மோனியக் கலையையும் கற்றுக் கொண்டார். கூத்துக்கலையின் நிபுணத்துவத்துவங்களை அறிந்ததுடன் அதன் மாற்றங்களுக்காகவும் உழைத்தார்.

**கூத்துக்கலையின் வளர்ச்சியின் பங்காளனாய்..**

மரபினைக் கற்றவனே அதனை முறியடிக்க முடியும் என்பது போல பாலதாஸ் அவர்கள் விடிய விடிய ஆடப்படுகின்ற கூத்துக்களில் காணப்பட்ட பல்வேறு பொருத்தமின்மைகளைக் கண்டு கொண்டதுடன், பேராசிரியர் வித்தியானந்தனின் கூத்துப்புத்தாக்க செயற்பாடுகளாலும் கவரப்பட்டு அவற்றினை திருத்துவதற்கு முயன்றார். அதே வேளை ஈழத்தில் புகழ்பெற்றிருந்த இசைநாடக மரபினையும் ஏன் பின்பற்றக்கூடாது என்ற கொள்கையுடன் தனது நண்பனான அன்டர்சனுடன் இணைந்து 'வளர்பிறை நாடக மன்றம்' என்னும் தொழில் முறை அரங்க அமைப்பினை உருவாக்கி அதனூடக பல்வேறு புத்தாக்க முயற்சிகளை மேற்கொண்டார்.

அக்காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த நடிகமணி வி.வி.வைரமுத்து அவர்களின் நாடகங்களைப் பின்பற்றி இசை நாடகங்களை உருவாக்கி இலங்கை எங்கும் கொண்டுசென்று மேடையேற்றினார். கண்டி அரசன், தீர்க்க சுமங்கலி போன்ற இசை நாடகங்களும், முத்தா மாணிக்கமா போன்ற கூத்துக்களும் இவர்களை நாடறியச்செய்தன. இலங்கையின் பல பாகங்களிலும் கொண்டு சென்று நாடகங்களை மேடையேற்றினர்.

இவற்றில் இயமன், கண்டி அரசன் போன்ற பாத்திரங்களை சிறப்பாக நடித்த பாலதாஸ் அவர்கள் பலராலும் பாராட்டப்பட்டார். இலங்கைக் கலைக் கழகம் நடத்திய போட்டியிலும் இவர்களது கண்டி அரசன் முதலிடம் பெற்றுப் அகில இலங்கை ரீதியாகப் பாராட்டப்பெற்றது. நேரச்சுருக்கம், நேர்த்தியான கதை நகர்வு, நடிப்பு போன்ற நுட்பங்களால் இவர்களது நாடகங்கள் கிராமத்தில் பலருக்கும் முன்னுதாரண நாடகங்களாக மிளிர்ந்தன. எந்த நடிகமணி வைரமுத்துவின் நாடகங்களைப் பின்பற்றி இசை நாடகங்களைப் படைத்தார்களோ, அரியாலையில் நடந்த போட்டி ஒன்றில் அவரது நாடகத்துடன் போட்டி இட்டு முதல் பரிசைத் தட்டிக்கொண்டார்கள். இவ்வாறு இசை நாடக மரபினைத் தம்வசமாக்கிய பெருமையும் பாலதாசையே சாரும். யுத்த சூழலில் சிறிது காலம் ஓய்ந்திருந்த



பாலதாஸ் அவர்களை எண்பதுகளின் இறுதியில் மரியசேவியர் அடிகளின் அழைப்பு மீளவும் இயங்கத்தூண்டியது.


**திருமறைக் கலாமன்றத்தில் ...**

எண்பதுகளின் இறுதியில் திருமறைக் கலாமன்றத்தில் இணைந்து கொண்ட இவர் திருமறைக் கலாமன்றத்தின் நாட்டுக்கூத்துப் பிரிவினைப் பொறுப்பேற்று மரியசேவியர் அடிகளின் வழி நடத்தலுடன் பல்வேறு பணிகளை ஆற்றத் தொடங்கினார். திருமறைக் கலாமன்றத்தில் நீ ஒரு பாறை, ஞானசௌந்தரி, அனைத்தும் அவரே, இடமில்லை, வீரத்தளபதி போன்ற பல கூத்துக்களை நெறிப்படுத்தினார். அதுவரை நடிகனாக, நெறியாளராக இருந்த பாலதாஸ் மரியசேவியர் அடிகளின் ஊக்கத்தினால் எழுத்தாளனாகவும் மாறினார்.

கூத்துக்களை நடித்தும் நெறியாள்கை செய்தும் வந்த பாலதாஸ் அவர்களை கூத்துக்களை, இசைநாடகங்களை எழுதவும் வல்லவராக மாற்றியது திருமறைக்கலாமன்றம். மரியசேவியர் அடிகளார் அவரை எழுதத்தூண்டி உடனிருந்து வழிப்படுத்தியதின் பேறாக புனித இராயப்பரின் வரலாறு 'நீ ஒரு பாறை' என்ற அவரது முதலாவது கூத்தாக வடிவம்பெற்றது. அதனைத் தொடர்ந்து பலகூத்துக்கள், இசைநாடகம் போன்றவை அவரால் உருவாக்கப்பட்டு மேடைகண்டன.

**நாட்டுக்கூத்து எழுத்தாளனாக..**

நாட்டுக் கூத்துக்களை எழுதுவதிலும் பாலதாஸ் ஒரு புரட்சியை செய்தார் என்று கூறமுடியும். காரணம் கூத்துக்களை எழுதுபவர்கள் பெரும் புலவர்களாகவும், மரபு இலக்கிய யாப்புக்களை அறிந்தவர்களாகவுமே இருந்தார்கள். ஆனால் அந்தப் பாடல்களும், கருத்துக்களும் பாமரமக்களை எந்தளவுக்கு சென்றடைந்தது என்பது கேள்விக்குறியே. அத்தகைய மரபு வழி எழுத்துக்களில் இருந்து பாலதாசின் எழுத்துருக்கள் வேறுபட்டவையாக இருந்தன. அவை எளிமையான சந்தங்களுடனும், அரங்க மொழியே பாடும் மொழியாக அமையும் தன்மையில் உரை நடை நாடககங்களுக்கு நிகரான பேச்சோசைப் பண்புடன் அமைந்தன. அதனால் தொடர்பாடல் வலிமையான படைப்புக்களாக அவை அமைந்தன . நீ ஒரு பாறை, அனைத்தும் அவரே .இடமில்லை பத்திரிசியார் ஏற்றிய பாஸ்கா தீ.வீரத்தளபதி.கோடி அற்புதர், சவுலன் சின்னப்பன், மறைகாத்தமாவீரன்.இரத்தக்கடன், புனித பிலிப்பு நேரியார் என 25 நாடகங்கள் வரை எழுதினார். அவற்றில் வீரத்தளபதி, சவுலன் சின்னப்பன், மறைகாத்த மாவீரன், பத்திரிசியார் ஏற்றிய பாஸ்கா தீ போன்றவை நூலுருப் பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது.



**கூத்துக்கலையில் அண்ணாவியாராக....**

இவை தவிரவும் செம்பியன்பற்று, தாளையடி, மணற்காடு, கிளாலி எனப் பல இடங்களிலும் பல்வேறு பங்குத் தளங்களிலும், பல கிறிஸ்தவ கூத்துக்களை அப்பங்கு மக்களுக்கு பயிற்றுவித்து மேடையேற்றியுள்ளார். அவ்வாறே புனித பத்திரிசியார் கல்லூரி, புனித யோன் பொஸ்கோ பாடசாலை,புனித பரி-யோவான் கல்லூரி,திருக்குடும்ப கன்னியர் மடம், புனித சாள்ஸ் மகாவித்தியாலயம் என பல பாடசாலைகளிலும் மாணவர்களுக்கு பல கூத்துக்களைப் பயிற்றுவித்து மேடையேற்றியதுடன், மாணவர்கள் மத்தியில் கூத்துக்கலை வளர வேண்டுமென்பதிலும் அதிக அக்கறை கொண்டும் செயற்பட்டார். அவை மட்டுமன்றி புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி, யாழ்ப்பாணம் மறைக்கல்வி நடு நிலையம் என கத்தோலிக்க உருவாக்க மையங்களில் இவரது பயிற்றுதலும், பண்படுத்தலும் இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இன்று கூத்து செயற்பாடுகளில் செயற்திறனோடு ஈடுபடுகின்ற பல இளங்கலைஞர்கள் இவரது மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.அவரது பணியின் நிறைவு என்று கூறக்கூடிய வகையில் கடந்த வருடம் புனித யோசவ்வாஸ் ஆண்டினைச் சிறப்பிக்கு முகமாக 'மறைகாத்த மாவீரன்' என்ற புனிதரின் வரலாற்றினைக் கொண்ட தனது கூத்தினை தனது மகன் அருட்பணி. பிறையன் அடிகளின் உதவியுடன் அருட் தந்தையர்களுக்குப் பயிற்றுவித்து அதற்கு ஆர்மோனிய இசையை வழங்கி ஊக்கத்துடன் நின்று பல இடங்களிலும் மேடையேற்றியமை குறிப்பிடத்தக்க வரலாற்று நிகழ்வாகும்.

**தொகுப்பு: காவலூர் யோவான்**

**நிறைவில்**


பாசையூர் என்ற கிராமத்தில் பிறந்து அதன் கலை வளங்களை நன்கு உட்கொண்டு, பிற அரங்குகளில் தான் கண்ட புதுமைகளையும் தன்னாளுமைக்குட்படுத்தி மரபுக்கலைகளான கூத்து, இசை நாடகம் ஆகிய இரண்டின் வளர்ச்சியிலும் புது இரத்தம் பாய்ச்சி, அவற்றின் மறுமலர்ச்சியின் பங்காளனாகவும் பல மாணவர்களை உருவாக்கிய பிதாமகராகவும் உயர்ந்து நிற்கின்ற அமரர் அண்ணாவியார் அன்ரனி பாலதாஸ் அவர்கள் தனது பிறந்த நாளிலேயே இறக்கும் வரத்தினையும் பெற்று, இறையாசீரின் அடையாளமாக நிற்கின்றார். இவர் எமது மரபு வழி நாடக வரலாற்றில் பதியப்படவேண்டிய ஆளுமைகளில் ஒருவர். அவரது பணிகள் மதிக்கப்பட்டே கலாபூஷணம், ஆளுனர் விருதுகள் உட்பட பல விரு-துகள் அவரைத்தேடி வந்தன. தான் சார்ந்த மறைக்கும், தனது கிராமத்திற்கும், தான் விரும்பிய கலை மரபிற்கும் தன்னால் இயன்ற பங்களிப்பனை நல்கி, தன் வழியில் உருவாகக்கூடிய ஒரு கலைப் பரம்பரையையும் தோற்றுவித்து மறைந்த இவரது பணிவாழ்வு கலைஞர்களுக்கு நல்லதொரு முன்னுதாரணம். அவரது சுவடுகள் மறையக்கூடியவையல்ல. அவை மாணவ மரபாக காலத்தில் வாழும்.

## பங்குகள் தோறும் புத்துயிர்ப்பு பெறும் கூத்துமரபு

ஒரு காலகட்டத்தில் பங்குகள் தோறும் பல கூத்துக்கள் இரவிரவாக மேடையேற்றப்பட்டுக் கொண்டிருந்தமையை நாம் அறிவோம். கடந்த மூன்று தசாப்த காலமாக நடைபெற்ற யுத்த சூழலில் அவையெல்லாம் காணாமல் போயின. ஆயினும் அண்மைக் காலங்களில் வடமாராட்சி, தென்மாராட்சிப் பிரதேசங்களில் பல பங்குகளில் திருவிழாக்களையொட்டி கூத்துக்கள் மேடையேற்றப்படுகின்றன. இவை நல்ல முன்னுதாரணங்களாகவுள்ளன.

**புனித யூதாததேயு**

கடந்த 24.05.2018 அன்று செம்பியன்பற்று புனித பிலிப்பு நேரியார் ஆலய திருவிழாவினையொட்டி புனித யூதாததேயு நாட்டுக்கூத்தானது மேடையேற்றப்பட்டது. அண்ணாவியார் வின்சன் டிபோல் அவர்களால் எழுதப்பட்ட மேற்படி எழுத்துருவினை அண்ணாவியார் ஸ்ரனிஸ்லோஸ் (பாலையா) அவர்கள் நெறிப்படுத்தினார். செம்பியன்பற்று கிராமத்தின் மூத்த கலைஞர்களும், இளையவர்களும் இதில் கலந்து கொண்டனர். நான்கு மணித்தியாலங்கள் நிகழ்ந்த இக்கூத்தினை கிராமத்தவர்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது.



**ஊசோன் பாலந்தை**

கடந்த 13. 06. 2018 அன்று மணற்காடு, புனித அந்தோனியார் ஆலய பங்கு மக்களினால் புனித-ரின் திருவிழா வில், 'ஊசோன் பாலந்தை' என்ற பழைமையான கூத்து மேடையேற்றப்பட்டுள்ளது.

(தொடர்ச்சி 11ம் பக்கம்)



# யாழ்ப்பாண மறைமாவட்டம் ஒரு வரலாற்றுப் பார்வை
## பின்னணி, தோற்றம், வளர்ச்சி

(சென்ற இதழ் தொடர்ச்சி)

இதன் பின்னணியிலேயே அவர்களிடையே புரிந்தணர்வின்மை ஏற்பட்டிருக்கலாம் எது எப்படியிருப்பினும் ஆயர் பெற்றக்கீனியின் பணிப்புரையின படியே செமேரியா அடிகள் செயலாற்றிக்கொண்டிருந்தனர் அத்துடன் அவரும் இருவர் மூவராக அனுப்பப்பட்டுக்கொண்டிருந்த அமல மரித்தியாகிகள் சபையினரும் தமிழ் மொழியைக் கற்பதில் மிகவும் ஆர்வமுடன் செயல்பட்டுக்கொண்டிருந்தனர்.

**இரு ஆயர்களிடையே செமேரியா அ.ம.தி. அடிகள்**

ஆயர் புனித யூஜின் டி மசனட் தமது குருக்களை அனுப்பும் போது அவர்கள் வடக்கின் ஆயர் பெற்றக்கீனியின் பொறுப்பில் அவரது நிர்வாகத்திலுள்ள வடக்குத் திருத்தூது மாவட்டத்தில் தான் பணியாற்றுவார்கள் என்ற நிபந்தனையுடன் தான் அனுப்பினார் என்று முன்னர் பார்த்தோம். அவ்வாறே செமேரியா அ.ம.தி. குழுவினருக்குப்பின் வந்தவர்களும் வந்து வடக்கிலேயே பணியாற்றிக் கொண்டிருந்தனர். அமல மரித்தியாகிகள் சபையினரின் நிறுவுநர் ஆயர் புனித யூஜின் டி மசனட் தமது குருக்களின் இலங்கை மறைத்தள நிலைமைகளை உன்னிப்பாக அவதானிக்கத் தொடங்கினார். போர்த்துக்கல்லில் கத்தோலிக்க சமயத்திற்கெதிரான நிலைப்பாட்டைக் கொண்ட அரசு பதவிக்கு வந்து துறவற சபைகள் எல்லாவற்றையும் கலைத்திருந்தது. போர்த்துக்கல்லின் ஆட்சியில் இருந்த கோவா பிரதேசத்தையும் இது பாதித்தது. அங்கிருந்து இனியும் மறைப்பணியாளர்களை (ஒரட்டோரியன் சபையினரை) எதிர்பார்க்க முடியாது என்ற நிலைமை உருவானது. இந்தப் பின்னணியில் தான் அமல மரித்தியாகிகள் சபையினர் இலங்கை வந்து வடக்கில் தமது பணியைத் தொடங்கினர். இலங்கையில் சுதேச குருக்கள் இல்லாத நிலையில் அவர்களை உருவாக்குவதற்கு எந்தவித முயற்சியும் இதுவரை எடுக்கபடாத நிலையுமிருந்தது. உதிரிகளாக அங்கொன்றும் இங்கொன்றுமாக இத்தாலி போன்ற ஐரோப்பிய நாடுகளின் சில துறவற சபைகளிலிருந்து சில குருக்கள் வந்தாலும் அவர்களது எண்ணிக்கை மிகவும் குறைவாகவேயிருந்தது. இந்தப் பின்னணியில் ஆயர் புனித யூஜின் டி மசனட் தாமே ஏற்படுத்திய அமல மரித்தியாகிகள் சபையினரை இலங்கைக்கு அனுப்பினார். படிப்படியாக அவர்கள் வடக்கு திருத்தூது மாவட்டத்தில் எண்ணிக்கையில் கூடுதலான குருக்களாயினர். ஆயர் பெற்றக்கீனியும் தமது திருத்தூது மாவட்டத்தை வளர்ச்சிப்பாதையில் முன்னெடுத்துச் செல்ல அமல மரித்தியாகிகள் சபையினரையே நம்பியிருக்க வேண்டி ஏற்பட்டது. அதுவே யதார்த்தமாகவுமிருந்தது. அத்துடன் அமல மரித்தியாகிகள் சபையினரின் குழுவின் முதல்வராக விளங்கிய செயற்திறன் மிக்க செமேரியா அடிகளே அவரது செயலராகவும் குருமுதல்வராகவும் விளங்கினார். ஆயரின் மடல்களை எழுதுவதிலும், மற்றும் முக்கிய நடவடிக்கை மேற்கொள்வதிலும் அவர் முக்கிய பங்கு வகித்து வந்தார். தொடர்ந்து வடக்குத் திருத்தூது மாவட்டத்தில் அமல மரித்தியாகிகள் வேரூன்றி அதன் வளர்ச்சியில் பிரதான பங்காளிகளாக இருக்கவேண்டும் என்று எண்ணியதில் நியாயம் இருந்தது. வடக்கில் கூடுதலாக அமல மரித்தியாகிகள் சபையினரே பணியாற்றிக்கொண்டிருந்தனர். தொடர்ந்தும் அமல மரித்தியாகிகளை அனுப்பிக்கொண்டிருக்கவும் நிறுவுனர் தயராக இருந்தார். எனவே அமல மரித்தியாகிகள் சபைக்கு ஒருவர் ஆயர் பெற்றக்கீனிக்குப் பின் இணை உதவி ஆயராக (Coadjutor Bishop) வேண்டுமென்று ஆயர் புனித யூஜின் டி மசனட் எதிர்பார்த்தார். ரோமாபுரிக்கும் இது சரியெனப்பபட்டது. எனினும் இதனை அவரே நேரடியாக ஆயர் பெற்றக்கீனிக்குப் தெரியப்படுத்துமாறு ரோமாபுரி கேட்டது. உடனே ஆயர் புனித யூஜின் டி மசனட்டும் ஏற்கனவே வடக்குத் திருத்தூது மாவட்டத்தில் பல கஷ்டங்கள் மத்தியில் பணிபுரிந்து வரும், இன்னும் தொடர்ந்து பணியாற்றத்தயாராகவுள்ள தமது சபையினருக்கு ஒரு உறுதியான உத்தரவாதம் வழங்கப்படவேண்டுமென்றும், அதனைத் தமது குருக்களுள் ஒருவரை பெற்றக்கீனி ஆண்டகையின் இணை உதவி ஆயராக ஏற்படுத்துவதன் மூலம் தரமுடியுமென்றும் எழுதினார். அத்துடன் அமல மரித்தியாகிகள் தமக்கேயுரித்தான மறைபணித்திட்டத்தை முன்னெடுத்துச் செல்லவும், அவர்கள் அமலமரித்தியாகிகள்

**அருட்பணி S.V.B. மங்களராஜா**

சபை ஆயரின் கீழ் பணிபுரிவது சுலபமாகும் என்றும் சுட்டிக்காட்டினார். ஆயர் பெற்றக்கீனி தமக்கு இன்னும் வயதாகவில்லை எனவே இணை உதவி ஆயர் பற்றி இப்போதைக்கு சிந்திக்கவேண்டியதில்லையென்று கருதினார்.

இந்நிலையில் செமேரியா அடிகள் இரு ஆயர்களுக்குமிடையில் ஒரு தர்மசங்கடமான நிலையில் தாம் இருப்பதை உணர்ந்தார். இங்கே யாழில் தமக்கு உதவியாக முழு அமைச்சலை வெளிப்படுத்த வேண்டிய நிலையில் அவரது செயலராக, குருமுதல்வராக, அவரது திட்டங்களை நடைமுறைப்படுத்துபவராக, அவருக்குப் பதிலாகச் செயல்படுபவராக, அவரைப்போலரோமைத்தலைமைப்பீடத்துக்கு பிரமாணிக்கமானவராக இருந்து செயற்பட்டார். மறுபக்கம் தமது சபை முதல்வராக அவருடன் அடிக்கடி கடிதத் தொடர்பு கொண்டுஇங்குள்ள களநிலைகளை விளக்கி அவரது வழிகாட்டல்களையும் அறிவுரைகளையும் அமல மரித்தியாகிளின்தனித்துவமானசெயற்திட்டங்களைநடைமுறைப்படுத்துகிறவராயுமிருந்தார். ஆயர் பெற்றக்கீனி, முன்கோபம் போன்ற சில குணாதிசயங்களால் அவரது குருக்கள் மற்றும் மக்கள் மத்தியில் அவ்வளவு பிரபலமாவராக இருக்கவில்லை. அவரது நடவடிக்கைகள் பற்றிய சில விமர் சனங்கள் செமேரியா அடிகளுக்கும் எட்டியதால் அவரது நிலை மேலும் தர்மசங்கடத்திற்குள்ளாகியது.

அதேவேளையில் ரோமை விசுவாசப்பரப்புதல் சபையும், நற்செய்தி அறிவிப்பு தலைமைப் பணியகமும் ஆயர் பெற்றக்கீனி ஒரு இணை உதவி ஆயரைப் பெறவேண்டுமென வலியுறுத்தியது. இந்த வலியுறுத்தல் தொடர்ந்ததால் தன்னை வேறோர் இடத்துக்கு அனுப்பும்படி அல்லது பணியிலிருந்து இளைப்பாற அனுமதிக்குமாறு கேட்குமளவுக்கு அவர் பொறுமை இழந்து வந்தார். 1855ம் ஆண்டு ஆயர் பெற்றக்கீனி ஒரு சமரசத்தீர்வை முன்மொழிந்தார்.

அதன்படி வடக்குக்கிழக்கு மாவட்டங்களின் ஆன்மீக, லௌகீக நிர்வாகத்தை அமல மரித்தியாகிகள் சபையினருக்கு விட்டு, தாம் அவற்றின் ஆயத்துவ ஆட்சியதிகாரத்தை வைத்திருப்பதாகவும் கூறினார். ஆனால் இணை உதவி ஆயர் என்ற பேச்சுக்கே இடமில்லை என்றுவிட்டார்.

(தொடரும்.....)

# LENTEN COLLECTION - PARISHES - 2018

| Date | Receipt No | Parish Priest | Amount | Date | Receipt No | Parish Priest | Amount |
|---|---|---|---|---|---|---|---|
| 19.03.2018 | 4887 | Fr.F.Jeevanadas, Kokulai, Nayaru, | 3,200.00 | 16.04. 2018 | 5469 | Fr.M.Jesuratnam, Ilavalai | 22,660.00 |
| 21.03.2018 | 4888 | Fr.A.P.Devasahayam, Nallur | 9,420.00 | 17.04. 2018 | 5470 | Fr.M.Cansbover, Sakkoddai | 31,000.00 |
| 21.03.2018 | 4889 | Fr.James Pathinathar, Koiyathodam | 10,000.00 | 19.04. 2018 | 5471 | Fr.S.Leo Armstrong, Iranaippalai | 10,000.00 |
| 21.03.2018 | 4890 | Fr.Sebastian, Pilopallai | 2,280.00 | 20.04. 2018 | 5472 | Fr.M.A.P.R.Savundranayagam,Pandateruppu | 8,200.00 |
| 21.03.2018 | 4891 | Fr..S.A.George, Mullaithivu | 13,000.00 | 20.04. 2018 | 5473 | Fr.S.Vimalasekaran, Valappadu | 30,000.00 |
| 26.03.2018 | 4892 | Fr..S.J.Rajanayagam, Anjananthalvu | 6,610.00 | 23.04. 2018 | 5474 | Fr.S.Roy Ferdinand, Annaikoddai | 16,400.00 |
| 26.03.2018 | 4893 | Fr.M.Devid, Mandithivu | 8,200.00 | 23.04. 2018 | 5475 | Fr.R.H.Sahayanayagam,Mathagal | 18,000.00 |
| 26.03.2018 | 4895 | Fr.M.Rex Savundra, Chavakachcheri | 28,500.00 | 25.04. 2018 | 5475 | Fr.A.Arulthasan, Poonakari | 7,000.00 |
| 26.03.2018 | 4895 | Fr.R.A.J.Mathias, Kopay | 10.000.00 | 25.04. 2018 | 5477 | Fr.B.A.Brian, Marisankoodal | 4,750.00 |
| 26.03.2018 | 4897 | Fr.A.P.Anthonypillai, Karaveddy | 16,350.00 | 25.04.2018 | 5478 | Fr.B.A.Brian, Valithundal | 2,330.00 |
| 27.03.2018 | 4897 | Fr.M.Nixon Collins. Kulamurippu | 5,000.00 | 02.05. 2018 | 5479 | Fr.X.W.James, Marusuvil | 5,400.00 |
| 28.03.2018 | 4899 | Fr.M.Pathinathan, Urumpiray | 15,000.00 | 02.05. 2018 | 5480 | Fr.Mac Donald, Kaddaikkadu | 4,000.00 |
| 02.04. 2018 | 4900 | Fr.J.J.Muvulis, Pandianthalvu | 27,200.00 | 08.05. 2018 | 5481 | Fr.Bernard, Chunakam | 31,450.00 |
| 02.04. 2018 | 5451 | Fr.Emil R.Poul Delft | 10,000.00 | 08.05. 2018 | 5482 | Fr.Reynold George, Paranthan | 5,000.00 |
| 02.04. 2018 | 5452 | Fr.S.M.P.Ananthakumar, Naranthanai | 5,000.00 | 08.05. 2018 | 5483 | Fr.A.Yavis, Point Pedro | 70,000.00 |
| 02.04. 2018 | 5453 | Fr.Canicius Raj, Vaddakachchi | 3,000.00 | 09.05. 2018 | 5484 | Fr.J.B.Antony, O.L.R. Jaffna | 15,160.00 |
| 03.04. 2018 | 5454 | Fr.P.Iruthayathas, Thirunelvely | 8,000.00 | 10.05. 2018 | 5485 | Fr.Quinson Fernando, Mallavi | 2,000.00 |
| 04.04. 2018 | 5455 | Fr.S.J.Q.Jeyaranjan, Manipay | 83,165.00 | 14.05. 2018 | 5486 | Fr.J.B.Jothinathan, Kulamankal | 8,450.00 |
| 04.04. 2018 | 5456 | Fr.S.M.Sutharshan,Pathukudiyiruppu | 3,000.00 | 15.05. 2018 | 5487 | Fr.M.V.R.Ravichandran,Gurunagar | 35,000.00 |
| 06.04. 2018 | 5457 | Fr.S.Manuel, Periyavilan, Ilavalai | 8,320.00 | 17.05. 2018 | 5488 | Fr.M.Reggie RageswaranSt.John's Church, Jaffna | 32,800.00 |
| 06.04. 2018 | 5458 | Fr.A.Augustine, Sillalai | 12,550.00 | 18.05. 2018 | 5489 | Fr.C.G.Jeyakumar, Atchuvely | 5,800.00 |
| 06.04. 2018 | 5459 | Fr.R.C.X.Nesarajah,St.Mary's Cathedral, Jaffna | 40,500.00 | 18.05. 2018 | 5490 | Fr.P.Renard Cherilness,Kumulamunai | 5,000.00 |
| 09.04. 2018 | 5460 | Fr.P.Pathinathar, Karampon | 10,500.00 | 18.05. 2018 | 5491 | Fr.M.L.Thayaharan, Alampil | 3,826.00 |
| 09.04. 2018 | 5461 | Fr.A.F.Loshington OMI,Chaddy & Mankumpan | 6,000.00 | 22.05. 2018 | 5492 | Fr.A.V.Sylvesterthas, Tharmapuram | 5,000.00 |
| 11.04. 2018 | 5462 | Fr.P.L.Rajasingam,Kayts | 15,330.00 | 04.06. 2018 | 5493 | Fr.J.A.Jesuthas , Kilinochchi | 9,480.00 |
| 11.04. 2018 | 5464 | Fr.S.Sebastian OMI,Maniyanthodam | 23000.00 | 04.06. 2018 | 5494 | Fr.M.Jesuratnam, Ilavalai | 6,520.00 |
| 11.04. 2018 | 5465 | Fr.S.Sebajeevan, Punkuduthivu | 3,400.00 | 06.06. 2018 | 5495 | Fr.E.S.C.Mariathas Mankulam | 2,500.00 |
| 16.04. 2018 | 5466 | Fr.Eric Roshan Columbuthurai | 4,030.00 | | | | 871,161.00 |
| 16.04. 2018 | 5467 | Fr.Antony Bala,, Navanthurai | 9,900.00 | | | | |
| 16.04. 2018 | 5468 | Fr.Jero Selvanayagam, Passaiyoor | 72,800.00 | | | | |

**Revd.Fr.Saverian Eugene Francis**
**Director**
**Human Development Centre**
**Jaffna**

# இலக்கமைத்து வாழும் குடும்பம்

அருட்பணி சிங்கராயர் ஸ்ரீவன் (CMF)

நாம் எங்கு செல்லுகின்றோம் என்பது தெளிவாக தெரிந்தால் தான் நாம் செல்லுகின்ற பயணமும் பயனுள்ளதாக அமையும். நல்ல இலக்கமைத்து செயற் படுகின்ற குடும்பம் தனது வெற்றிப் பாதையில் அரை மடங்கை கடந்து விட்டது என லாம். இலக்கு, குறிக்கோள், நோக்கம் எமது வாழ்வையும் சரியான வழியில் அமைத் துக் கொள்வதற்கு மிகவும் முக்கியமாகும். பெற்றோர்கள் அடிப்படையில் நல்ல தலை வர்களாக இருத்தல் வேண்டும். இலக்கு என்றால் எதிர்காலத்தில் நாம் எப்படி வாழப்போகின்றோம் என்பதை முன்கூட் டியே திட்டவட்டமாக வரையறை செய்து கொள்வதாகும். இன்னும் ஐந்து அல்லது பத்து வருடங்களுக்குப் பின் நாம் எப்படி வாழவிரும்புகின்றோம், எதை அடைய விரும்புகின்றோம்என்பதைமுன்கூட்டியே தீர்க்கமாக வரையறை செய்து அதை நோக்கி பயணிப்பது முக்கியம். இலக்க மைக்கும் பொழுது அனைவரது பங்களிப் பையும் ஊக்குவிக்கவேண்டும்.

**இலக்கமைக்கும் போது கவனிக்கப்பட வேண்டிய விடயங்கள்.**

**தெளிவு**

எமது இலக்கு குறிப்பிட்டுச் சொல்லக் கூடியளவிற்கு மிகத் தெளிவாக இருத்தல் வேண்டும். எப்படியும் வாழலாம் என்று வாழாமல் இப்படித்தான் வாழவேண்டும் என்ற தெளிவு இருக்கின்றபோதுதான் உறுதி யோடு செயற்படமுடியும். நாங்கள் என் னென்ன மதிப்பீடுகளை விருத்தி செய்ய விரும்புகின்றோம் என்பதை மிகத் தெளி வாக கருத்தில்கொள்ள வேண்டும்.

**அளவுகோல்**

எமது இலக்கு எது என்பதை மிக நுணுக்க மாக அளவிடக்கூடிய வகையில், கவனிக்க கூடியவகையில் இருத்தல் வேண்டும். மேலோட்டமான சிந்தனையில் சிக்கித் தவிக்காமல் இதுதான் எமது இலக்கு என் பதை தெளிவாக கவனிக்கக் கூடியவகை யில் இருத்தல் வேண்டும்.

**அடையக்கூடிய இலக்கு**

ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் அடையக் கூடிய இலக்காக இருத்தல் வேண்டும். எங்களுடைய ஆளுமைக்கு, ஆற்றலுக்கு ஏற்றவகையில் இலக்கு அமைக்கப்படல் வேண்டும். என்றுமே அடையமுடியாத நடைமுறைக்கு சாத்தியமற்ற மேலோட்ட மான, எமது ஆற்றலுக்கு அப்பாற்பட்ட இலக்குகளை அமைப்பது முற்றிலும் தவிர்க்கப்படல் வேண்டும்.

**யதார்த்த பூர்வமானது**

அதீத கற்பனையில் இலக்குகளை அமைக்காமல் நடைமுறை வாழ்க்கை யோடு ஒத்துப் போகக்கூடிய, அத்தோடு சவாலாக அமையக்கூடிய இலக்குகளை அமைத்து, குடும்ப உறுப்பினர்களை இணைத்து பயணிக்கவேண்டும். எதிர் காலத்தில் நிறைந்த பயனை அனுபவிக்கக் கூடிய வகையில் இலக்குகளை அமைத்து செயற்படவேண்டும்.

**காலவரையறைக்குட்பட்டது**

இலக்குகளை நாங்கள் அமைக் கின்றபோது நேரக் கணிப்பீடு முக்கியத் துவம் பெறுகின்றது. நீண்டகால நோக்கம், குறுகியகால நோக்கம் என்று அமைத்துக் கொள்ளவேண்டும். ஒருபெரிய இலக்கை அடையவேண்டுமென்று சொன்னால் அதை பல சிறிய சிறிய கூறுகளாக பிரித்தெடுத்து அதை குறுகியகால இலக்காக அமைத்து செயற்படுத்தவேண்டும். எனவே குறிப்பிட்ட கால வரையறைக்குள் இலக்குகளை அடையவேண்டும். குறிப்பிட்ட காலவரை யறைக்குள் இலக்குகளை அடைவது குடும் பத்தில் உற்சாக உணர்வை அதிகரிக்கும்.

எந்தவொரு இலக்கையும் அமைக் கின்றபோது குடும்ப உறவுகள் அதிக பலன் பெறும் வகையில் அமைத்தல் வேண்டும். எந்த இலக்கு குடும்பத்திற்கு அதிக நிறைந்த பலன்களைக் கொண்டு வருகின் றதோ அதை அமைத்து குடும்பத்தை வெற்றிப் பாதையிலும் மகிழ்ச்சிக் களிப் பாலும் உற்சாகம் ஊட்டி ஊக்கமளித்து பாராட்டி உறுதிப்படுத்தி வழிநடத்தவேண்டும்.

**உதாரணம் :** எமது குடும்பத்தின் தூர நோக்கு (Vision Statement of the Family) நாம் ஒருவரையொருவர் அன்பு பரிமாற் றத்தினால் ஊக்கமளித்து, ஊட்டமளித்து இச்சமூகத்திற்கு அன்பான பொறுப்புமிக்க பிரஜைகளாவோம்.

**செயற்திட்டம்** (Action Plan)

1. நாம் அனுதினமும் காலைவேளையில் ஒருவரையொருவர் ஆசி கூறி அரவ ணைத்து விடைபெற்றுச் சென்று மாலை யில் வீடுதிரும்பும்போது மீண்டும் அன் போடு வரவேற்போம்.
2. அனுதினமும் எமது பிள்ளைகளை பாராட்டி ஊக்கப்படுத்தல்.
3. பிள்ளைகளுக்கு கொடுக்கப்பட்ட பொறுப் புக்கள் சரியாக நிறைவேற்றப்படுகின்றதா என கவனித்தல்.
4. அனுதினமும் குறைந்தது அரை மணித் தியாலயமாவது குடும்பமாக சேர்ந்து செபித்தல்.
5. அனுதினமும் உணவருந்துவதற்கு முன்பும் பின்பும் செபித்தல்.
6. ஆலயத்திற்கு குடும்பமாக செல்லுதல்.
7. எமது பிள்ளைகள் பாடசாலையில் கல்விச் செயற்பாடுகளில் எவ்வாறு செயற் படுகின்றார்கள் என்பதை கேட்டறிந்து கொள்ளுதல்.
8. இர்வுவேளையில் குடும்பமாக அனை-வரும் சேர்ந்து உணவருந்துதல்.
9. அன்றாடம் நிகழ்ந்த நிகழ்வுகளை கேட்டறிதல்.
10. வாரம் ஒருமுறை ஒவ்வொரு சனிக்கிழ



மையும் குடும்ப நல்லாலோசனைக் கூட்டம் நிகழ்த்துதல்.

**இலக்கமைத்து செயற்படுவதால் குடும்பத் திற்கு கிடைக்கும் நன்மைகள்**

குடும்பத்தில் நல்லொழுக்கத்தை கட்டி யெழுப்பமுடியும். எமது ஆற்றல்கள் திற மைகள் வீண் விரயம் செய்யப்படாமல் எல்லாவற்றையும் ஒருங்கிணைத்து அனை வரும் பயன்பெறக் கூடிய இலக்கை அடை கிற்பொழுது குடும்பத்தில் மகிழ்ச்சியும் உற் சாகமும் பிறக்கும். ஆற்றல்கள் திறமை களை விருத்தி செய்யலாம். எப்படி கலந்தா லோசிப்பது? எப்படிகூடித்திட்டமிடுவதுநடை முறைப்படுத்துவது? ஒரு குழுவாக எப்படி செயற்படுவது? என்பவற்றை விருத்தி செய் கின்றோம். நல்ல தலைமைத்துவப் பண்பு களை குடும்ப உறுப்பினர்களிடையே ஊக்கு விக்க முடியும். குடும்பத்திற்குள்ளேயே நல்ல பொறுப்புணர்வுள்ள பிள்ளைகளை வளர்த் தெடுக்க முடியும். இவ்வாறு நிறைந்த நன்மைகளை பலன்களை ஒரு குடும்பம் இலக்கமைத்து செயற்படுகின்ற பொழுது அனுபவிக்க முடியும்.

---

இல்லறம் காப்போம்

# பிள்ளைகள் நல்ல பிள்ளைகளாக



அருட்கலாநிதி வின்சன் பற்றிக் (அமதி)

**பி**ள்ளைகள் நல்ல பிள்ளைகளாக உரு வாக்கப்படுவதே இன்றைய காலத்தின் தேவையாகும். நல்ல குடும்பம், நல்ல சமூகம், நல்ல சூழல் நல்ல பிள்ளைக ளையே தோற்றுவிக்கும் என்பது வெளிப் படை. அன்புள்ள கணவனும் அன்புள்ள மனைவியுமாக வாழ்பவர்கள் பொறுப் புள்ள பெற்றோராகத் திகழ்வார்கள். பெற் றோர் பிள்ளைகளுக்கு ஆற்றக்கூடிய பெரிய தொண்டு அவர்கள் அன்புள்ள கணவனும் அன்புள்ள மனைவியுமாக வாழ்வதேயாகும்.

"இன்றைய காலப் பிள்ளைக ளைக் கட்டுப்படுத்துவதோ, திருத்துவதோ பெரும் கஸ்டமாக உள்ளது. அந்தக் காலத்திலென்றால் அம்மா கீறிய கோட் டைத் தாண்டவே மாட்டோம். இன்றோ பிள்ளைகளைப் பார்த்து, 'இதைச் செய்' என்றால் அதைச் செய்வார்கள். 'அங்கு போகாதீர்கள்' என்றால், 'அது உங்க ளுக்கு விளங்காது. வீணாகக் குழப்பாதீர் கள்' என்று பிள்ளைகள் அலட்சியப் படுத்துவார்கள். எந்தக் காலத்திலும் பிள்ளைகள் பெற்றோருக்குப் பணிந்து வாழவேண்டும். அதேவேளை பிள்ளை களின் நியாயமான எதிர்பார்ப்புகளை பெற்றோர்கள் நிறைவேற்றப் பின் வாங்கக்கூடாது.

**பிள்ளைகளைத் திருத்தும்பொழுது பெற்றோர் கவனிக்கவேண்டியவை:**

1. பிள்ளைகள் தவறு செய்யும்பொழுது, 'நீ எப்போதும் இப்படித்தான். நீ ஓர் உதவாக்கரை' என்று எரிந்து விழாதீர்கள்.
2. பிள்ளைகள் ஐந்து வயதுக்குக் குறைவாயுள்ள பொழுது அவர்களை அடித்து, வெருட்டி, பயமுறுத் திக் கண்டிக்காதீர்கள்.
3. பிள்ளைகள் முன்னால் நேர்மையாக வும் நாணயமாகவும் நடந்து கொள்ளுங்கள்.
4. பிள்ளைகள் சிறப்பாகச் செயற்படும் பொழுது பாராட்டி உற்சாகப்படுத்துங்கள்.
5. பிள்ளைகள் வயதான பின்னர் அவர் கள் சுயமாகச் சிந்தித்துத் தீர்மானம் எடுக்க வாய்ப்பு வழங்குங்கள்.
6. பிள்ளைகள் கேள்வி கேட்கும்பொழுது அலட்சியப்படுத்தாது அவர்களது கண் களை உற்றுநோக்கிய வண்ணம் பதில் அளியுங்கள்.
7. பிள்ளைகளைத் திருத்தும்பொழுது கரி சனையோடு நடந்துகொள்ளுங்கள்.
8. பிள்ளைகள் தமது நியாயமானதேவை களை நிறைவுசெய்ய வாய்ப்பளியுங்கள்.
9. பிள்ளைகள் சிறுசிறு காரியங்களிற்கூட விசுவாசமுள்ளவர்களாய் நடந்துகொள் வதற்கு ஊக்கமளியுங்கள்.
10. பிள்ளைகள் இயல்பாகவே நல்லவர் கள் என்பதை ஏற்றுக்கொண்டு புரிந்து ணர்வோடு செயற்படுங்கள்.

**உங்கள் பிள்ளைகளின் ஆளுமை, உருவாக்கம் அவர்கள் வாழும் சூழலி லேயே பெரிதும் தங்கியுள்ளது. பின்வரும் கூற்றுக்களைக் கவனியுங்கள்:**

1. குற்றம் கண்டு பிடிக்கும் சூழலில் வாழ் பவர் குறைகூறக் கற்றுக்கொள்வார்.
2. கோழைகள் மத்தியில் வாழ்பவர் சவாலை ஏற்றுக்கொள்ளத் தயங்குவார்.
3. அங்கலாய்ப்பான சூழலில் வாழ்பவர் அடிக்கடி தளம்பலுறுவார்.
4. அதிக பாதுகாப்பில் வாழ்பவர் பயத்தின் மறுவடிவமாவார்.
5. அடிக்கடி நகைப்பிற்குள்ளாக்கப்படுபவர் வெட்கத்திற்கு ஆளாவார்.
6. அவனை அவனாக, அவளை அவ-ளாக ஏற்றுக்கொள்ளும் சமூகத்தில் வாழ்பவர் அன்பில் வளருவார்.
7. உற்சாகமூட்டும் சூழலில் வாழ்பவர் நம்பிக்கையின் சுடராய் பிரகாசிப்பார்.
8. சகிப்புத்தன்மை கொண்ட கூட்டத்தில் வாழ்பவர் பொறுமையின் இலக்கண மாகத் திகழ்வார்.
9. சமத்துவ சமூக அமைப்பில் சஞ்சரிப்ப வர் சமூக நீதியின் உறைவிடமாகத் திகழ் வார்.

இருபத்தெட்டு வயது வாலிபனும் இருபத்திநான்கு வயது யுவதியும் காதல் வாழ்வில் நான்காண்டு இறுதியில் பெற்றோரினால் பலவந்தமாகப் பிரிவுக்கு ஆளானார்கள். நான்கு வருடங்களாக இரகசியமான முறையில் காதலை அனுமதித்த பெற்றோர் பெரும் பணத் தோடு பலர் பெண் கேட்க வந்ததும் தமது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்கின் றார்கள். உயிருக்கு உயிராக அன்பு செய்துவந்த தாய் மிரட்டுகின்றார்.

"நீ உன் காதலியைக் கைவிட்டுவிடு. கை நிறையப் பணத்துடனும் கழுத்து நிறைய நகையுடனும் வந்துபோகும் பெண்களில் ஒருத்தியைத் தேர்ந்தெடு. நீ வசதியோடு வாழ்வதையே நான் விரும்பு கின்றேன். இல்லையேல் என்னை நீ பிணமாகப் பார்ப்பாய்".

இன்று எத்தனையோ இளசுகள் தாம் விரும்பியபடி தாம் விரும்பிய வாழ்க்கைத் துணைவரைத் தேர்ந்தெடுக்கமுடியாமல் பல்வேறு உபாதைகளுக்கு உள்ளாக் கப்படுகின்றார்கள். பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையே ஒரு வழித் தொடர்பு இருப்பின் அதனை மாற்றிய மைப்பதே அவசியமானது. இருசாராரும் ஒவ்வொரு பிரச்சனைக்கும் இரு பக்கங்கள் உள என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும். கட்டாயப்படுத்தல்க ளும் கருணையில்லா மிரட்டல்களும் காட்டுமிராண்டித்தனமான வெளிக்காட் டல்களேயாகும். சுதந்திரமான சூழலில், ஜனநாயக முறையில் பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டு, மதிப்பீடு செய்யப்பட்டு, சுமூகமான தீர்வினை எய்துதல் ஆளை ஆள் நம்பி உணர்வூட்டம் பெறும் நிலை யிலேயே சாத்தியமாகும்.

**பெற்றோரே கவனியுங்கள்:**

- உங்கள் குழந்தைகளுடன் அன்புடன் பேசுங்கள். உங்கள் கண்கள் அவர்களை நோக்கியே இருக்கட்டும்.
- உங்கள் குழந்தைகள் அமைதியாகவும் பரபரப்பில்லாமலும் இருக்கப் பயிற்றுவியுங்கள்.
- உங்கள் குழந்தைகளிடமிருந்து அள வுக்கு அதிகமாக எதிர்பாராதீர்கள்.
- உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் பாரபட்சபோக்கினைக் கை விட்டு விடுங்கள்.
- உங்கள் குழந்தைகள் கேட்பதெல்லாம் கொடுக்கவேண்டும் என்று எண்ணாதீர் கள்.

அதேவேளை பிள்ளைகள் தமது பெற்றோர் சார்பாக அன்பையும் மரியாதை யையும் வெளிக்காட்டவேண்டும். கூரை யில் ஏறியபின்னர் ஏணியை உதைத்து விடும் மனோநிலையை வயோதிபப் பெற் றோர் வருத்துமுற்றதும் அவர்களைக் கவ னிக்காது உதாசீனப்படுத்துவது வெளிக் காட்டுகின்றது. அவர்களை வேலைக்கார ராக, அடிமைகளாக நடாத்துவது ஈன மான செயலேயாகும். மேலும், பிள்ளைகள் தம் மத்தியில் சகோதரத் துவ அன்பை வளர்த்துக் கொள்ள வேண்டும். ஏனைய சகபாடிக ளோடும் அன்பாக நடந்துகொள்ள வேண்டும்.

# கழிவுகளால் அழிவுகள்...



கி.துஸ்யந்தன்
பேச்சு மொழிச் சிகிச்சை விஞ்ஞானம்
களனி பல்கலைக்கழகம்

எமது நாட்டில் காலநிலை மாற்றம் காரணமாக கடலரிப்பு, நிலத்தாழிறக்கம், மண்சரிவு, வரட்சி, வெள்ளப்பெருக்கு போன்ற இயற்கை அனர்த்தங்களினால் ஏற்படுகின்ற பல்வேறு பாரிய பாதிப்புக்களுக்கு நாம் முகம் கொடுத்து வருகின்ற வேளையிலே தற்போது பல்வேறு வகையான கழிவுப் பொருட்கள் எம்மை அச்சுறுத்தி வருகின்றன.

உணவுக் கழிவுகள், விலங்குக் கழிவுகள், மருந்துக் கழிவுகள், பிளாஸ்ரிக் கழிவுகள், பொலித்தீன் கழிவுகள், கண்ணாடிக் கழிவுகள் போன்றவை வருடா வருடம் பெருந்தொகையாகச் சேர்கின்றன. இந்நிலையில் கழிவுகள், குப்பைகள் மேலும் அதிகரிக்குமானால் உயிர்ப்பல்வகைமைக்கே அபாயமாக மாறும் என்பதை எவராலும் மறுக்க முடியாது.

2050 ஆம் ஆண்டளவில் கடலில் மீன்களுக்குப் பதில் பிளாஸ்ரிக் பொருட்களே காணப்படும் என உலக ஆய்வு மையம் தெரிவித்துள்ளமை நோக்கத்தக்கது.

கழிவுகள் குப்பைகள் சுற்றுச் சூழலுக்கு பாதிப்பில்லாத வகையில் அவற்றினை தரம் பிரித்துச் சரியான முறையில் வெளியேற்றுவதற்கான முகாமைத்துவ திட்டங்களோ வழிமுறைகளோ இல்லாமையே இந்நிலைமைக்கு முக்கிய காரணமாகும். அண்மையில் நம் நாட்டையே உலுக்கிய சம்பவத்திற்கு சிறந்த முகாமைத்துவ திட்டமிடல் இல்லாமையே காரணமாகும். "மீதோட்டமுல்லை" என்னும் அழகிய சிறு பிரதேசம் குப்பைக் கழிவுகளால் புதையுண்டு போனதுடன் பல உயிர்களும் காவு கொள்ளப்பட்டன.

குறிப்பாக சுற்றுச்சூழலுக்கு அதிக அச்சுறுத்தலாக பிளாஸ்ரிக், பொலித்தீன் கழிவுகளே உள்ளன. இவைகளை நாம் குப்பைகள் எனக் கருதாத நிலையில் அவை அபாயக் குப்பைகளாக உருவெடுத்து வருகின்றமை அதிர்ச்சி தரக்கூடிய விடயமாகும். உலகில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் பிளாஸ்ரிக் பொலித்தீன் பொருட்களின் பாவனைகளால் ஏற்பட்டுள்ள இந்நிலைமையைக் கட்டுப்படுத்துவது என்பது இலகுவான காரியமல்ல.

ஏனெனில் இம்மூலப் பொருட்களான உற்பத்திப் பொருட்களின் மோகத்துக்கு அடிமைப்படுத்தப்பட்டுள்ள எம்மால் எப்படி இலகுவாக இதிலிருந்து வெளிவர முடியும்.

அண்மையில் தொழில்நுட்ப சாதனங்களின் பாவனையாலேயே அதிகளவு தொற்றா நோய்கள் ஏற்படுகின்றன என சுகாதார அமைச்சர் தெரிவித்திருந்தார். இவை உடல் சுகாதாரத்திற்கு பாரிய கெடுதலைத் தருகின்ற அதேவேளை சுற்றுச் சூழல் பல்வகைமையை இல்லாதொழித்து விடுகின்றன. பிளாஸ்ரிக், பொலித்தீன், கண்ணாடி, மின்னியல், இலத்திரனியல் பொருட்கள் போன்றவற்றை மண்ணில் புதைக்கும் போது அவை உக்குவதில்லை. அதேவேளை, அவை நீண்ட காலம் மண்ணில் தங்கியிருந்து மண் மற்றும் மண்ணுயிர்களின் தரத்தினையும் மாற்றி விடுகின்றன.

சில சந்தர்ப்பங்களில் நாம் அக் கழிவுகளை எரிக்கும்போது அவற்றில் இருந்து வெளியாகும் நச்சுப்புகைகள் வளிமண்டலத்துடன் கலந்து விடுகின்றன. இதன் மூலம் சுவாசப் பிரச்சினைகள், அமில மழை, ஓசோன் படலத்தில் துவாரம் என்பன ஏற்பட்டு வேறு பல சூழல் பாதிப்புக்களை ஏற்படுத்தி விடுகின்றன.

வேறு உணவு மற்றும் விலங்குக் கழிவுகளும் சூழல் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றன. இவற்றினால் நீண்டகாலப் பிரச்சினைகள் எனப் பெரிதாக இல்லாதபோதிலும் சுகாதாரம் மற்றும் தொற்று நோய்கள் எனக் குறுங்காலப் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. அழுகிய பழுதடைந்த உணவுப் பொருட்களையோ கால்நடை விலங்குகளின் கழிவுகளையோ மண்ணில் புதைக்காது பொது இடங்களில் இடுகின்றனர். இந்நடவடிக்கையால் நுண்ணங்கிகளின் பெருக்கம் அதிகரித்து மண், வளி, நீர் என்பன மாசடைவதற்கான வழி ஏற்படுகின்றது.

பொது இடங்களில் குவிக்கப்பட்டிருக்கும் குப்பைகளால் அப்பகுதியில் துர்நாற்றம் மற்றும் நோய்த் தொற்றுக்கள் ஏற்படுவதுடன், குப்பைகளால் அப்பகுதி வடிகால்கள் அடைபடுகின்றன. தொடர்ந்து இந்த வடிகால்கள் சீராகத் துப்பரவு செய்யப்படாமையால் மழை காலங்களில் வெள்ளநீர் செல்ல முடியாமல் உள்ளது. இந்நிலையில் தான் தாழ்வான நிலப்பகுதி வீடுகளுள் வெள்ள நீர் செல்கின்றது. எனவே பொது மக்கள் குப்பைகள் தொடர்பான விழிப்புணர்வைக் கொண்டிருக்க வேண்டும்.

கழிவுகளால் ஏற்படும் அழிவுகளைத் தடுப்பதற்கு கழிவுப் பொருட்கள் உரியவாறு முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும். இப்பிரச்சினைகளை இனி மேலும் உணராதிருந்தால் பாரிய அழிவுகளை நாமே தேடிக் கொள்ளவேண்டி வரும். மனித குலத்தை அழிக்கும் இந்தக் குப்பைக் கழிவுகளால் உருவெடுத்துள்ள பிரச்சினைகளைக் கட்டுப்படுத்தி சுற்றாடலையும் சுகாதாரத்தையும் பாதுகாப்போம். சூழலைப்பேணிச்சுகம்பெற்றுவாழ்வோம்."

"கடவுள் தந்த அழகிய உலகு கழிவுகளால் அழியாதிருக்கட்டும்..."

# மூன்றாம் நற்செய்தி ஆசிரியர் – புனித லூக்கா

பவுல் அடிகளாரின் அணியில் பவுலுக்குத் துணையாகப் பயணம் செய்தவர்களில் "லூகஸ்" என்ற கிரேக்கப் பெயருடைய லூக்காவும் ஒருவராகும். லூகஸ் என்றால் ஒளி கொடுத்தல் அல்லது பிரகாசித்தல் என்று அர்த்தம். ஆம், அவரது பெயரைப் போலவே அந்த லூக்கா ஆண்டவருக்காகவே பிரகாசித்தார்.

துரோவா பட்டணத்தைச் சேர்ந்த புற இனத்தவரான லூக்கா, கல்வியறிவிலே சிறந்து விளங்கிய வைத்தியராவார். இவர் எப்போது கிறிஸ்துவை அறிந்து கொண்டார் என்று திடமாகக் கூறமுடியவில்லை.

எம்மாவுக்குப் போகும் வழியில் கிறிஸ்துவைச் சந்தித்த சீடர்கள் இருவரில் ஒருவர் என்று இவரைச் சிலர் கூறினாலும் வேதாகமத்தில் ஆதாரம் இல்லை. லூக்கா நற்செய்தியில் 1:2 இல் அவர் எழுதுவதில் இருந்து அவர் கிறிஸ்துவைக் கண்ணால் கண்ட சாட்சியல்ல என அறிகிறோம்.

அநேகமாக லூக்கா துரோவா பட்டணத்தில் வைத்து பவுல் அடிகளாரை சந்தித்து அவர் ஊடாக கிறிஸ்துவையும் சந்தித்திருக்க வேண்டும். லூக்காவைக் குறித்து பவுல் அடிகளால் கொலோசியர் 4:14-2 தீமோத்தேய 4:11, பிலேமோன் 1:24 ஆகிய மூன்று இடங்களில் பெயர் சொல்லிக் குறிப்பிடுகிறார்.

லூக்கா தமது எழுத்துக்களில் மருத்துவச் சொற்களை பயன்படுத்தியுள்ளார். அக்கால மருத்துவத்தில் கிரேக்க மொழியிலே உயர்ந்த சொற்பதங்கள் பாவிக்கப்பட்டு வந்துள்ளன. அவற்றையே லூக்காவும் பாவித்துள்ளார். துரோவா பட்டணத்தில் வைத்திய தொழில் செய்து கொண்டிருந்த லூக்கா பவுல் அடிகளாருடன் நற்செய்திப் பணியில் இணைந்து கொள்கிறார். பயணங்களின் போது வைத்தியர் ஒருவர் இணைந்திருப்பது பவுல் அடிகளாருக்குப் பெரிய ஆறுதலாக இருந்திருக்கும். நற்செய்திப் பணியின் போது சில நேரங்களில் கசையடிகளும், கல்லெறிகளும் நிகழ்ந்தபோது காயமுற்றவர்களுக்கு லூக்காவின் வைத்திய உதவி தேவைப்பட்டிருக்கும். பவுல் அடிகளார் நன்றியுணர்வில் லூக்காவை அன்பான மருத்துவர் என வாழ்த்துகிறார். (கொலேசியர் 4:14)


வைத்தியத்துறை எக்காலத்திலும் மிகவும் புனிதமாக நோக்கப்படும் துறையாகும். நோயாளி மீது உண்மையான கரிசனை காட்டுவதே ஒரு வைத்தியரின் நல்ல மருந்து. அது வைத்தியருக்கு இருக்கவேண்டிய குணாதிசயத்தில் முக்கியமானதொன்று. இவ்வாறான மனநிலையும் இரக்கத்தன்மையும் கொண்டிருந்த தெய்வத்தையே அவர் நேசித்தார். அனுதினமும் யாசித்தார் என்பதையே அவரது எழுத்துக்களும் கருத்துக்களும் படம் பிடித்துக் காட்டுகின்றன.

இயேசுவின் பொதுப்பணியில் திக்கற்ற பிள்ளைகள், ஏழைகள், நோயாளிகள், விதவைகள் ஆகியோரில் அதிக கரிசனை இயேசு காட்டியதாக லூக்காவின் நற்செய்தி வெளிப்படுத்துகிறது.

வன்னி வாழ் இதயம்
ம.சூசைமுத்து

**சிறந்த எழுத்தாளர் - சரித்திர ஆசிரியர்**

லூக்காவின் நற்செய்தியும், திருத்தூதர் பணி நூலும் அவரையொரு சிறந்த தொரு எழுத்தாளர், சரித்திர ஆசிரியர் எனவும் அவரது எழுத்துக்களை வாசிக்கும் போது அவர் கவியில் மிகச் சிறந்தவரெனவும் மருத்துவம், இலக்கியம், சரித்திரம், புவியியல், சமூகவியல் ஆகியவற்றில் கற்றுத் தேர்ந்தவர் எனவும் வெளிப்படுகிறது. நான்கு நற்செய்திகளிலும் லூக்காவின் நற்செய்தி இலக்கிய நயமுடையதாகவும், ஒரு கவிஞனைப் போல் சொற்சித்திரம் தீட்ட



இவருக்கு இணை இவரே. லூக்காவிடம் இருந்த ஆற்றலை இறைவன் சிறப்பாகப் பயன்படுத்தினார்.

**சிறந்த இறையியலாளன்**

லூக்கா - சரித்திரம் கற்பிக்கும் நோக்குடன் மட்டும் எழுதவில்லை. அந்தச் சரித்திரத்தில் செயற்பட்ட இறைவனைக் குறித்தும் எழுதுகிறார். சரித்திரப் பின்னணியில் இறையியல் உண்மைகளை கற்பிக்கிறார். லூக்கா நற்செய்தியில் புற இனத்தவர்களுக்கும் நற்செய்தி என கிறிஸ்துவை உலக மீட்பராகச் சித்தரிக்கும் லூக்கா எருசலேமில் ஆரம்பித்த திருச்சபை புற இனத்தார் மத்தியில் சென்று வளர்ந்ததை தெளிவுபடுத்திக் காட்டுகிறார்.

**இரத்த சாட்சி**

லூக்காவின் இறுதிக் காலத்தைக் குறித்து எதுவும் கூறப்படவில்லை. ஆனால் பாரம்பரிய செய்திகளின்படி அவர் இரத்த சாட்சியாக மரித்தார் என அறிகிறோம்.

**சிந்தனைக்கு**

கிறிஸ்துவுக்காக மரிக்க வேண்டுமென்ற ஆசை, விருப்பம் எமக்கும் இருக்கலாம். ஆண்டவருக்காக வாழ விருப்பமற்றவர்கள் துன்புறும் மக்கள் மத்தியில் தங்களைத், தியாகங்கள் செய்ய விரும்பாதவர்கள் உண்மைகள் மறைக்கப்படும் போது உண்மைகளை எடுத்துரைக்க முன்வராதபோதும் சொகுசான கோட்டைகளை விட்டு வெளியே வராதபோதும் ஆண்டவருக்காக மரிப்பதெப்படி?

இன்றைய சூழலில் லூக்காவைப் போன்ற எழுத்தாளர்கள் தேவை. உண்மையை வெளிப்படுத்தும், நீதிக்காக குரல் கொடுக்கும் எழுத்தாளர்கள் உருவாகும்போது இறையியலும், உலகியலும் உலகில் உயர்வடையும். இறைவனிடம்ஞானத்தைப்பெறகையேந்துங்கள். அவர் ஆற்றலைத் தருவார்.

# குடும்பங்கள் கடவுளின் திட்டத்தின் மையம்

**- திருத்தந்தை**

இத்தாலியில் குழந்தை பிறப்பு அதிகரிப்புக்கு ஆதரவளிப்பதிலும் குழந்தைகளுக்கு ஆதரவாக கொள்கைகள் உருவாக்கப்படுவதன்முக்கியத்துவத்தை நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும் ஒரு போதும் மனம்தளர வேண்டாமென இத்தாலிய குடும்பநலஅமைப்பினரிடம் திருத்தந்தை பிரான்சிஸ் கேட்டுக்கொண்டார்.

குடும்ப கழகங்கள் கூட்டமைப்பின் ஏறக்குறைய 150 பிரதிநிதிகளை, வத்திக்கானில் சந்தித்து உரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஒருநாட்டின் மிகப்பெரும் முதலீடாகவும், அதன் வருங்கால வளமைக்கு முதன்மையான காரணமாகவும் குழந்தைகள் இருக்கும் அதேவேளை அவர்களின் பிறப்பு குடும்பங்களின் வறுமைக்குக் காரணம் என அடிக்கடி சொல்லப்படுகின்றது.

பல நிலைகளில் குடும்பங்கள் பே-ாதுமான உதவிகளைப் பெறாமல் இருப்பதே இதற்குக் காரணம் என்றும் திருத்தந்தை கூறினார்.

இப்பிரச்சினையும், ஏனைய பிரச்சினைகளும் மன உறுதி மற்றும் பிறரன்புடன் எதிர்கொள்ளப்பட வேண்டும் என்றும், குடும்பங்கள் மீது காட்டப்படும் அக்கறை மனிதரின் மாண்பை அடிப்படையாகக் கொண்டிருப்பதாய் இருக்கவேண்டும் என்றும் உரைத்த திருத்தந்தை குடும்பம் மற்றும் மனித வாழ்வுக்கு ஆதரவாக இந்த அமைப்பினர் ஆற்றிவரும் பணிகளை ஊக்குவித்தார்.

குடும்பகழகங்கள் கூட்டமைப்பு குடும்பங்களின் அழகை உணர்த்துவதற்கு கடந்த 25 ஆண்டுகளாக எடுத்து வரும் முயற்சிகளைப் பாராட்டிய திருத்தந்தை, இந்த அமைப்பினர் பல்வேறு வழிகளில் ஊக்குவிக்கும் குடும்பம் கடவுளின் திட்டத்தின் மையமா-கும் என்றும், குடும்பம் மனித வாழ்வின் தொட்டில் என்றும் கூறினார்.

இந்த அமைப்பினர் அன்பின் மகிழ்வுக்குச் சான்றுகளாய் வாழுமாறும், தனக்காகச் செபிக்குமாறும் மேலும் திருத்தந்தை பிரான்சிஸ் கேட்டுக்கொண்டார் .

## மல்வம் திருக்குடும்ப ஆலய பெருவிழா

உடுவில் மல்வம் திருக்குடும்ப ஆலயப் பெருவிழா 22.06.2018 ஆரம்பமாகி 01.07.2018 பெருவிழாவுடன் நிறைவுறும்.

நவநாள் வழிபாடுகள் தினமும் மாலை 5.30 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகும்.

30.06.2018 சனிக்கிழமை திருநற்கருணை விழாவும் 01.07.2018 ஞாயிற்றுக்கிழமை திருவிழாத் திருப்பலியும் இடம்பெறும். "வழிபடுவோம் வாருங்கள்," "கடவுளின் வார்த்தை உயிருள்ளது", 'இளமையின் கனவு இறையரசின் கனவாகட்டும்", "அன்புறவில் கட்டப்பட்ட திருக்குடும்பம்", "தேடலில் தெளிவு பெறுவோம்", "செபமே வாழ்வு - செபமே வலிமை", "துன்பம் கடவுளைக் கற்றுக்கொடுக்கும் ஆசான்", "மன்னிப்பு - உடைந்த உள்ளங்களின் உறவுப்பாலம்", "உறவின் ஒன்றிப்பே நற்கருணை", திருக்குடும்பம் எமது குடும்பங்களின் முன்மாதிரி" ஆகிய கருப்பொருள்களில் இம்முறை திருவிழா வழிபாடுகள் இடம்பெறுகின்றன.

## பங்குகள் தோறும்...

(7ம் பக்கத் தொடர்ச்சி)

நாவல் ஒன்றினை அடிப்படையாகக் கொண்டு 1915 அளவில் எழுதப்பட்ட மேற்படிக்கூத்தானது அக்காலத்தில் பலராலும் மேடையேற்றப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. பல தசாப்த கால இடைவெளியின் பின்பு இக்கூத்து மேடையேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனை கிராமத்தின் கூத்துக் கலை ஞரான கீரன் என்பவர் நெறிப்படுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது. கிராமத்தின் மூத்தகலைஞர்களுடன் அதிகப்படியான இளங் கலைஞர்கள் பங்குகொண்டமை வரவேற்கத்தகதாகும்

**புனித அந்தோனியார்**

23.06.2018 அன்று வெற்றிலைக்கேணிபுனிதஅந்தோனியார் ஆலயத்தில் புனித அந்தோனியார் கூத்து மேடையேறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இந்த புத்தெழுச்சியானது கூத்தை மறந்த பல கிராமங்களுக்கும் ஒரு ஊக்கமாக அமையுமாயின் எமது கூத்துக்கலை மீளவும் மலர்ச்சிகொள்ளும்.

## 6ம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 16 . 11 . 1935 | 24 . 06 . 2012 |

திருமதி

**மேரிதீற்றா ஆசீர்வாதம்**

(றஞ்சிதம்)

" இருள் சூழ்ந்த பள்ளத்தாக்குகளில் நான் நடக்க நேர்ந்தாலும் அஞ்சேன் நீர் என்னோடிருக்கின்றீர் "

(தி.பா.23:4)

கலகலத்த உன் பேச்சு கானல் நீரானதுவோ
கனிவான உன்வதனம் நீராகிப்போனதுவோ
அருகிருந்து எமை அரவணைக்க இங்கு
அருமையான எம் அம்மா இல்லை இன்று
பெருமையாய் உன் நிழலில் வாழ்ந்த காலம்
வெறுமையாய் போனதுவே ஆறாண்டு காலம்

ஆண்டவன் பாதத்தில் நீர் அமைதிபெற
அனுதினமும் நாம் வேண்டுகின்றோம்

மாரீசன் கூடல்
இளவாலை

AD53

நினைவினில் என்றும்
கணவன், பிள்ளைகள்
மற்றும் உறவுகள்

## 31ம் நாள் நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 21 . 03 . 1935 | 04 . 06 . 2018 |

அமரர்

**பொன்ராசா அன்ரன் ஆனந்தராஜா**

( ஓய்வுபெற்ற ஆசிரியர் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி )

" என்னிடம் நம்பிக்கை கொண்டவன் இறப்பினும் வாழ்வான் "

04.07.2018 புதன்கிழமை அன்று காலை 06 மணிக்கு வவுனியா இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

AD57

407, இறம்பைக்குளம்,
வவுனியா
024 222 1984

பாசமுடன் நினைவுகூறும்
மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்

## 48ம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 06 . 10 . 1962 | 26 . 06 . 1970 |

செல்வி

**மிரியம் சாமினி**

" வாழ்ந்தாலும் இறந்தாலும் நாம் ஆண்டவருக்கே உரியவர்கள் "

விண்ணக வாழ்வுக்காக தினமும் இறைவனை வேண்டுகின்றோம்

சுருவில்

AD 54

குடும்பத்தினர்

## இறை பிரசன்னத்தில் 3ம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 15 . 04 . 1940 | 05 . 07 . 2015 |

அமரர்

**ஆசீர்வாதம் வின்சன்ற் துரைராஜா**

" இன்றே நீர் என்னோடு வான் வீட்டில் இருப்பீர் "


AD49

மண்ணக வாழ்வை நிறைவாக்கி
விண்ணகப் பிறப்பை அன்புடன் ஏற்று
ஆண்டுகள் மூன்று கடந்ததும் எப்படி ?
எங்கள் இதயங்களில் தெய்வமானீர்
கண்களில் நீர் சொரிந்து கலங்குகின்றோம்
உம் ஆன்மா இறைபதத்தில் வாழ
அனுதினம் செபத்தில் இறைஞ்சுகின்றோம்.

" அமலகம் "
கரவெட்டி

என்றும் உம்
அழியா நினைவுகளுடன் வாழும்
குடும்பத்தினர்

## முதலாம் ஆண்டு நினைவு



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 03 . 11 . 1941 | 05 . 07 . 2017 |

அமரர்

**யோசேப் அகஸ்ரின்**

" வாழ்ந்தாலும் இறந்தாலும் நாம் ஆண்டவருக்கே உரியவர்கள் "

(உரோ 14:5)

அன்பின் பிறப்பிடமாய் பண்பின் உறைவிடமாய் பாசத்துக்கு இலக்கணமாய் வாழ்வின் வழிகாட்டியாய் வாழ்ந்து எம் வாழ்வில் ஒளியேற்றிய அன்பு ஐயாவே!

ஆண்டு ஒன்று சென்றாலும் உங்களைப்பற்றிய நினைவுகளோ என்றும் எம்முடன் தொடர்கிறது. நீர் இறைவனுடன் இன்புற்றிருக்க வேண்டுகின்றோம்.

அம்மன் வீதி
பண்டத்தரிப்பு

AD56

தகவல்
மனைவி,பிள்ளைகள்.




முல்லைத்தீவு மறைக்கோட்டம் அளம்பில் புனித அந்தோனியார் ஆலய திருவிழாத் திருப்பலி 13.06.2018 யாழ் அயர் பேரருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. யாழ் அயருடன் மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி ஜோர்ஜ் அடிகளார் மற்றும் பங்குத்தந்தை, குருக்கள் இணைந்து திருப்பலி ஒப்புக்கொடுத்தனர்.



நாரந்தனை புனித பேதுரு பாவிலு ஆலய பங்கைச் சேர்ந்த மாணவ மாணவிகளுக்கு யாழ் ஆயர் பேரருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் உறுதிப்பூசுதல் திருவருட்சாதனம் வழங்கப்பட்டது. பங்குத்தந்தை ஆனந்தகுமார் அடிகளார் மற்றும் குருக்கள், துறவியர், மறையாசிரியர்கள் இந்நிகழ்வை சிறப்பாக ஒழுங்கமைத்திருந்தனர்.

## வாழ்த்துகின்றோம்



யாழ் பல்கலைக்கழகத்தின் 33 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் குருநகர் பங்குத்தந்தையும், யாழ் புனித யோசவ்வாஸ் இறையியல் கல்லூரி இயக்குநருமாகிய அருட்பணி ம.வி.இ. இரவிச்சந்திரன் அடிகளார் முதுதத்துவமாணி (M.Phil) பட்டத்தினைப் பெற்றுக் கொண்டார். அடிகளார் ஆன்மீகப் பணிகளோடு கல்விப் பணியிலும் சிறந்து விளங்க இறை ஆசீர் வேண்டி வாழ்த்துகின்றோம்

## பரந்தன் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா



பரந்தன் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா கடந்த 17.06.2018 பங்குத்தந்தை அருட்பணி றெனோல்ட் ஜோர்ஜ் அடிகளார் தலைமையில் சிறப்பாக இடம்பெற்றது.

கிளிநொச்சி மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி யேசுதாஸ் அடிகளார் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்ட திருவிழாத் திருப்பலியில் அருட்பணி வரதன் குரூஸ் அமதி அடிளார் மறையுரை ஆற்றினார்.

**முல்லை மறைக்கோட்டத்தில்....**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்ப ஆராதனையோடு நற்கருணைப் பேரணி ஆரம்பமாகியது

இயேசுவின் திரு உடல் தாங்கிய நற்கருணைப் பேழை சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் உயர்த்தி வைக்கப்பட்டு ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் முன்செல்ல ஊர்தி பின் தொடர்ந்தது. முல்லை புதுக்குடியிருப்பின் பிரதான சந்தியில் விசேடமாக ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில் ஊர்தியிலிருந்து இறக்கப்பட்ட திருநற்கருணை, பேழையில் வைக்கப்பட்டு அருட்பணி றொபின்சன் அடிகளாரின் மறையுரையுடன் ஆராதனை இடம்பெற்றது. தொடர்ந்து இரணைப்பாலை மாத்தளன் வீதியின் வழியே பேரணி சென்றது. ஆனந்தபுரம் இயேசுதாஸ் வீதியில் சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட மேடையில் நற்கருணைப் பேழை வைக்கப்பட்டு ஆராதனைகள் மேற்கொள்ளப்பட்டு ஆசீர் வழங்கப்பட்டது. தொடர்ந்து இரணைப்பாலை குழந்தை இயேசு ஆலயத்தில் முல்லை மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி ஜோர்ச் அடிகளாரின் நிறைவு ஆசீருடன் நிகழ்வுகள் நிறைவேறியது.

பல்வேறுபட்ட வலிகளை அனுபவித்த எம் மக்களை அனைத்தினின் றும் வழிநடத்திக் காத்த நற்கருணை ஆண்டவருக்கு மக்கள் நன்றி தெரிவித்து பக்தியோடு பவனி வந்தனர்.

# இப்பிரபஞ்சம் பற்றி மேலும் அறிவதற்கு ஒருபோதும் அஞ்சக்கூடாது - திருத்தந்தை

வத்திக்கான் விண்வெளி ஆய்வுமையம் நடத்தும் கோடை கால பயிற்சியில் கலந்துகொள்ளும் ஏறக்குறைய அறுபது பிரதிநிதிகளை ஜுன் 14 வத்திக்கானில் சந்தித்து உரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் பல்வேறு சூழல்களைச் சார்ந்தவர்கள் ஒன்று சேர்ந்து பணியாற்றுகையில் நம் பிரபஞ்சம் பற்றிய பொதுவான புரிந்துகொள்ளல் வளர்வதற்கு உதவ இயலும் என்று கூறினார்.

இந்தப் பெரிய பிரபஞ்சம் பற்றிய புரிந்துகொள்ளல் நாளுக்கு நாள் வளர்ந்து வரும்வேளை பல்வேறு இடங்களிலிருந்து நாம் பெறுகின்ற அதிகளவிலான தகவல்களை எவ்வாறு சமாளிப்பது என்பதையும் கற்றுக்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என்று திருத்தந்தை கூறினார்.

இணையத்தளம் மற்றும் சமூக ஊடகங்களின் தகவல் புரட்சிகளுக்கு முன்னும் இந்தப் பரந்துவிரிந்த பிரபஞ்சத்திற்கு முன்னும் நாம் எவ்வளவு சிறியவர்கள் என நினைக்கத் தோன்றலாம். இத்தகைய நினைவு இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட ஆண்டுகளுக்கு முன்னரே எழுந்துள்ளது என்றுரைத்த திருத்தந்தை திருப்பாடல் 8 இல் இறைவனின் மாட்சியும் மானிடரின் மேன்மையும் (தி.பா.8: 4-6) பற்றி ஆசிரியர் வியந்து பாடியுள்ளார் என்று கூறினார்.

நமக்கு எல்லாம் தெரியும் என ஒரு போதும் நினைக்கக் கூடாது எனவும் அதேநேரம் இந்தப் பிரபஞ்சம் பற்றிமேலும் அதிகம் கற்றுக்கொள்வதற்கு ஒருபோதும் அஞ்சக்கூடாது என்றும். இந்தப் பிரபஞ்சத்தின் மீதுகொண்டிருக்கும் அன்பு இறையன்பின் முன்சுவை எனக் கண்டுணர வேண்டும் என்றும் திருத்தந்தை கூறியுள்ளார்.

பன்மைத் தன்மைகளுக்கு மத்தியில் பணிகள் ஆற்றிவருபவர்கள் உண்மை மீதும் பிரபஞ்சம் மீதும் அன்புகூர வேண்டும் எனவும், ஒருவர் மீது ஒருவர் மீது அன்பு காட்ட வேண்டும் எனவும் குறிப்பிட்ட திருத்தந்தை பயிற்சியாளர்களுக்குத் தன் வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

பல்வேறு விண்மீன்கள் பற்றி நடைபெற்று வரும் பெரிய அளவிலான கணக்கெடுப்பு என்ற தலைப்பில் வத்திக்கான் விண்வெளி ஆய்வு மையம் நடத்திவரும் கோடைகால பயிற்சி, ஜுன் 4ம் திகதி தொடக்கம் ஜுன் 29ம் திகதி நடைபெறும்.

## இரணைப்பாலை பங்கு மறைக்கல்வி மாணவர்களுக்கான கருத்தமர்வு



முல்லை மறைக்கோட்டம் இரணைப்பாலை பங்கு மறைக்கல்வி மாணவர்களுக்கான ஒரு நாள் கருத்தமர்வு 16.06.2018 வெள்ளிக்கிழமை தூய பற்றிமா மாதா ஆலய முன்றலில் யாழ் மறைமாவட்ட பொதுநல மாநாட்டுத் தலைவரான திரு றோமியல் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வை இரணைப்பாலை பங்குத்தந்தை அருட்பணி லியோ ஆம்ஸ்ரோங் அடிகளார் ஒழுங்கமைத்திருந்தார். உதவிப் பங்குத்தந்தை அருட்பணி மயூரன் அடிகள், அருட்சகோதரிகள், பங்கு மறையாசிரியர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இக்கருத்தமர்வில் இரணைப்பாலைப்பங்கைச் சேர்ந்த புனித பற்றிமா ஆலயம் (இரணைப்பாலை), புனித செபஸ்தியார் அலயம் ( ஆனந்தபுரம்), புனித சதாசகாய மாதா ஆலயம் (மாத்தளன்), புனித செபமாலை மாதா ஆலயம் (வலைஞர்மடம்) ஆகிய நான்கு ஆலயங்களைச் சேர்ந்த 130 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றி பயன் பெற்றனர்.

ஜேர்மன் நாட்டில் தமிழ் ஆன்மீகப் பணிபுரியும் அருட்பணி. நிரூபன் அடிகளாரின் அனுசரணையுடன் இந் நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## கரம்பொன் புனித செபஸ்தியார் ஆலய வருடாந்த திருவிழா

கரம்பொன் புனித செபஸ்தியார் ஆலய வருடாந்த திருவிழா எதிர்வரும் 29.06.2018 வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தினமும் மாலை 4.30 மணிக்கு திருச்செபமாலையுடன் நவநாள் வழிபாடுகள் நடைபெறும்.

07.07.2018 சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு திருநற்கருணை விழாவும், 08.07.2018 ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் இடம்பெறும்.





யாழ் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் அரச நிதி பெற்று யாழ் கிறீன்பீல்ட் சனசமூக நிலையத்தால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சிற்றாலயத் திறப்பு விழாவின்போது கிறீன்பீல்ட் சனசமூக நிலைய செயலாளர் திரு.திருச்செல்வம் மைக்கல் அவர்கள் யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்கலாநிதி ப.யோ.ஜெபரட்ணம் அடிகளாரால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

இப் பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2018 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது.